1.3.55.

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை
மாதம் இருமுறை



# செய்திகள்

## டாக்டர் சாமிநாதையர்

பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் நூற்றோராவது பிறந்த நாள் வந்தது. ஐயரவர்கள் 87 ஆண்டு காலம் வாழ்ந்து தமிழுக்குச் செய்த அரும்பெரும் சேவைகளைப் பாராட்டுவதற்காக, சென்னையில் மூன்று நாட்கள் விழாவாகக் கொண்டாடினார்கள். அவர் பதிப்பிப்பதற்காகச் சேகரித்த ஏட்டுச் சுவடிகளையும், நூல்களையும் வைத்து ஒரு கண் காட்சி அடையாற்று லைப்ரெரியில் நடைபெற்றது. முதல் அமைச்சர் காமராஜ் அதனைத் திறந்து வைத்தார். இரண்டாம் நாள் ஐயரவர்களிடம் பாடம் கேட்ட மாணவர்களுடைய மகாநாடு ஒன்று கூடியது. மூன்றாம் நாள் ராஜாஜி ஹாலில் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

## கிரிக்கெட்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெறும் ஐந்தாவது டெஸ்ட் மாட்சு பிப்ரவரி 26-ஆம் தேதி கராச்சியில் தொடங்கி நடைபெறுகிறது.

## குழந்தைகள் நாடக விழா

குழந்தை எழுத்தாளர் சங்கம் குழந்தைகளுக்கான நாடக விழா ஒன்று நடத்தவிருக்கிறது 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளே இவற்றில் நடிக்கும்படி இருக்கவேண்டும். சுமார் ஒரு மணி நேரம் நாடகம் நடக்கலாம். நாடகம் எழுதுபவருக்கு வயதுக் கட்டுப்பாடு ஒன்றும் இல்லை. இரண்டு நாளில் மொத்தம் ஆறு நாடகங்கள் நடத்தி, அவற்றில் இரண்டுக்குப் பரிசு தருவதாக யோசித்திருக்கிறார்கள். மேற்கொண்டு விவரம் அறிய விரும்புவோர் 10, வைத்தியராமையர் தெரு, சென்னை 17 என்ற விலாசத்துக்கு எழுதிக் கேட்கலாம்.

## ரெயில்வே கட்டணம்

ரெயில்வே பிளாட்பாரம் டிக்கெட் இது வரையில் இரண்டணாவாக இருந்தது. இதை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ஓரணாவாகக் குறைக்க ரெயில்வே இலாகா எண்ணியிருக்கிறது. தீபாவளி, தசரா விடுமுறைகளில் மலிவுக் கட்டணத்தில் ரிடர்ன் டிக்கட் முறை ஏற்படுத்தப்படுமாம். சென்னையிலிருந்து இப்பொழுது தாம்பரம் வரையில் மின்சார ரெயில் ஓடிக்கொண்டிருக்கிறது. இதை விழுப்புரம் வரையில் நீடிக்க விரை லேயே நடவடிக்கை எடுக்கப்படுமாம்.

## கண்ணன் பரிசுத் தொடர்கதை

சிறுவர்களுக்கான நல்ல நூல்கள் அதிகம் இல்லை என்ற குறை ந கெல்லாம் இருந்து வருகிறது. சிறுவர்களுக்கு என்று எழுதக்கூ சிறந்த எழுத்தாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எழு வேண்டிய சந்தர்ப்பம் கிடைக்காததுதான் நல்ல நூல்கள் அதிகம் வெ வராமல் இருப்பதற்குக் காரணம். கண்ணன் பத்திரிகையின் ஆதரவில் இதை முன்னிட்டு ஒரு சந்தர்ப்பத்தைத் தருவதற்காக ஒரு தொட கதைப் போட்டி நடத்த எண்ணியிருக்கிறோம். இந்தப் போட்டியை பரிசீலனை செய்யப் பஞ்சாயத்தார்கள் நியமிக்கப்படுவார்கள். தே தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்கதையாக வெளியிட்டு அதைப் புஸ்தகமாகவும் வெளியிடுவோம். தொடர்கதையாக வரு போதும் புத்தகமாக வரும்போதும் தனித் தனியே உரிய சம்மான வழங்கப்படும். தொடர்கதை கண்ணன் இதழில் 6 பக்கங்களுக் மேற்படாமலும் 12 இதழ்களுக்கு மேல் போகாமலும் இருக்க வேண் யது முக்கியம். மற்ற விவரங்களை விரைவில் வெளியிடுவோம்.

22
2/1796

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 5

1-3-'55

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| எங்கள் வீட்டுத் தங்கம் | .. | 3 |
| லீடர் மணி | .. | 5 |
| சூழ்நிலை | .. | 9 |
| மூன்று சோதனைகள் | .. | 13 |
| எந்த ஊர்? | .. | 18 |
| சேதுவின் சபதம் | .. | 21 |
| ரேடியோ வகைகள் | .. | 25 |
| கழக அங்கத்தினர்கள் | .. | 27 |
| பாரஸீக ரோஜா | .. | 29 |
| கேளுங்கள் சொல்கிறேன் | | 31 |
| பாலர் கவி அரங்கம் | .. | 33 |
| போட்டோ க்விஸ் | .. | 34 |
| சந்திரகிரிக்கோட்டை | .. | 36 |
| எங்கள் பகுதி | .. | 40 |
| செய்திகள் - 2-ஆவது அட்டை | | |
| கிளைக்கழகம் 3-ஆவது அட்டை | | |

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## 1955
## அதிருஷ்டக் குழந்தைகள்

**முதல் பரிசு (ரூ. 15)**

1. ஆர். என். ராஜன்,
(சந்தா எண் R. 166.)
10, நல்லதம்பி முதலித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

**இரண்டாம் பரிசு (ரூ. 10)**

2. எஸ். கே. ஆர் எம். ராமநாதன்,
(சந்தா எண் R. 13)
வெள்ளியாப்பட்டி (திருச்சி.)

**மூன்றாம் பரிசு (ரூ. 5)**

3. வி. ஆறுமுகம்,
(சந்தா எண் A. 71.)
பூலாம்பட்டிரோடு, இடைப்பாடி (சேலம்.)

4. பி. ஸ்ரீநிவாஸன்,
(சந்தா எண் S. 256.)
நஞ்சுண்டபுரம், காளப்பநாயக்கன்பட்டி, ராசிபுரம் வழி.

5. ஏ. ஏ. செல்லையா,
(சந்தா எண் FMY 962.)
கிட்டப்பிட்டியா எஸ்டேட், பெல்மடுல்லா (இலங்கை)

**நான்காம் பரிசு (ரூ. 2)**

6. எஸ். கிருஷ்ணன்,
(சந்தா எண் K. 75)
10, மூன்றாம் தெரு, அபிராமபுரம், சென்னை-18.

7. எம். பசுபதி,
(சந்தா எண் P. 117)
No. P. 109, கவர்மெண்ட் பிளாட், திம்பிரிகாஸ்யாயா (கொழும்பு-5)

8. எஸ். டி. சுப்ரமண்யம்,
(சந்தா எண் FMY 326)
ஈஸ்டர் ஸீடன் குரூப், கலுவாஞ்சிகுடி E.P. (இலங்கை)

9. ஆர். சம்பத் பாபு,
(சந்தா எண் S. 319)
S/o வி. கே. ராஜகோபாலன், B.A., ஏஜெண்ட், சென்டரல் பாங்க், திருநெல்வேலி டவுன்.

10. ஏ. ஆர். அருணாசலம்,
(சந்தா எண் FMY 997)
நுக்கில்ஸ் குரூப், மதுகெல்லி (இலங்கை)

பரிசுத் தொகைகள் மார்ச்சு மாதம் 1-ஆம் தேதி அனுப்பப்படும்.

OFFICE OF THE R... 12 MAR 1955 MADRAS

# குழந்தைகளே!

இந்த இதழில் இந்த வருஷத்து 'அதிருஷ்டக் குழந்தைகள்' பெயர்கள் வெளியாகியிருப்பதைக் காணலாம். அந்தக் குழந்தைகளுக்குக் கண்ணன் சார்பாக என் வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

பழைய சந்தாதார்கள், புதிய சந்தாதார்கள், குடும்பச் சந்தாதார்கள் ஆகிய எல்லாருடைய சந்தா எண்களையும் தனித் தனிச் சீட்டுகளில் எழுதி, அவற்றை நன்றாக மடித்துக் குலுக்கிப் போட்டு, ஒவ்வொரு சீட்டாக எடுக்கச் செய்தோம். முதல் சீட்டு முதல் பரிசு, இரண்டாவது எடுத்த சீட்டு இரண்டாம் பரிசு என்று பத்துச் சீட்டுகளையும் எடுத்துக் குறித்துக்கொண்டோம். அதன்படி முதல் பரிசைத் தட்டிக்கொண்டு போனவன் சென்னையைச் சேர்ந்த பையன். தமிழ் நாட்டுக்கே சென்னை தலைநகரமென விளங்குகிறதல்லவா? அதனால்தானோ என்னவோ, தலைநகரில் உள்ள ஒரு பையனுக்கே இந்த அதிருஷ்டம் வாய்த்திருக்கிறது. அவனை உங்கள் சார்பாகப் பாராட்டுகிறேன். இரண்டாவது மூன்றாவது நாலாவது பரிசு பெற்றவர்களையும் வாழ்த்துகிறேன். பரிசு சிறியதாயினும் இதை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்பார்கள் என்று நம்புகிறேன்.

கண்ணன் சந்தாதாரை அதிகப்படுத்துவதற்காகவே இந்தச் சீட்டு என்று சிலர் கருதக்கூடும். உண்மை அதுவல்ல. வருஷ ஆரம்பத்தில் கண்ணன் ஞாபகார்த்தமாகச் சந்தாதார்களுக்கு ஏதாவது ஒரு பரிசு வழங்க வேண்டும் என்பதே எங்கள் கருத்து. அதற்காகவே இந்தத் திட்டத்தை ஏற்படுத்தினோம். இப்பொழுது பரிசு பெற்றவர்களைத் தவிர மற்றவர்கள் அதிருஷ்டக் குழந்தைகள் இல்லையா என்ற கேள்வி வரலாம். மற்றவர்கள் இதனால் அதிருஷ்டசாலிகள் இல்லை என்று அர்த்தம் இல்லை. ஏதோ ஒரு பத்துக் குழந்தைகளுக்கு இந்தப் பரிசு பெறும் வாய்ப்பு இருந்தது. அவ்வளவுதான். மற்றவர்களுக்கு வேறு வேறு சந்தர்ப்பங்களில் இந்த மாதிரி அதிருஷ்டம் கட்டாயமாக ஏற்படலாம். மற்றவர்களும் இனி ஒவ்வொரு மாதமும் பரிசு பெறுவதற்கான யோசனை ஒன்றையும் முடிவு செய்திருக்கிறோம்.

கண்ணன் சந்தாதார்களை மட்டும் சேர்த்துக் கொண்டால் மாத மாதம் கண்ணன் வாங்குகிறார்களே, அவர்களுக்குச் சந்தர்ப்பம் தரவேண்டாமா? அதற்காகவே மற்றொரு திட்டம்.

மார்ச்சு 15-ஆம் தேதி இதழ் முதல் எல்லாக் கண்ணன் பத்திரிகையிலும் ஒவ்வொரு நம்பர் அச்சிடப்பட்டிருக்கும். அந்தக் கண்ணனை நீங்கள் பத்திரமாக வைத்திருக்கவேண்டும். அந்த நம்பர் உங்களுக்கு அதிருஷ்டத்தைத் தேடித் தரலாம். இந்த அதிருஷ்டக் குழந்தைகள் நம்பரைப் போல எல்லா நம்பர்களையும் குலுக்கிப் போட்டு, பத்துச் சீட்டுகள் எடுக்கப்படும், அந்தச் சீட்டுகளிலுள்ள எண்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, நாலாம் பரிசு என்று பரிசுத் தொகைகள் வழங்கப்படும். நம்பர் இல்லாத கண்ணன் இதழே இருக்காது. ஒவ்வொரு இதழிலும் கண்டிப்பாகப் பத்துப் பேர்களுக்கு அதிருஷ்டம் அடித்தே தீரும். ஒரு மாதம் இல்லாவிட்டால் அடுத்த மாதம் உங்களுக்குக் கண்டிப்பாகப் பரிசு கிடைக்கும். அதனால் உங்கள் கண்ணன் இதழை நீங்கள் அட்டையோ நம்பரோ கிழியாமல் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். ஓர் இதழ் விட்டு ஓர் இதழில் அதிருஷ்ட நம்பர்கள் பிரசுரமாகும். அப்போது உங்களுடைய கண்ணன் இதழை அனுப்பிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்தப் பரிசுத் திட்டம் உங்கள் எல்லாருக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன். உங்கள் எல்லாருக்கும் மகிழ்ச்சியைத் தரும் என்றும் நம்புகிறேன்.

—ஆசிரியர்.

OFFICE OF THE R
12 MA
MA



# எங்கள்வீட்டுத்தங்கம்

'சசிதேவன்'

1. எங்கள்வீட் டுப்பசு
ஈன்ற குழந்தைக்குத்
தங்கம் எனப்பெயர் வைத்துவிட்டோம்—நாங்கள்
தங்கம் எனப்பெயர் வைத்துவிட்டோம்!

211796.

2. எங்கள்—
தங்கம்ப டுத்திடும்
பாட்டைஎல் லாம்இங்கு
எங்கனம் சொல்லி முடித்திடுவேன்—அடி!
எங்கனம் சொல்லி முடித்திடுவேன்!

3. சும்மா—
துள்ளிக்கு திக்குது
தூரத்தில் பாயுது
துஷ்டத் தனம்பல பண்ணுதடி—தினம்.
துஷ்டத் தனம்பல பண்ணுதடி!

4. அது—
எப்பொழு தும்என்னை
ஏனோ முறைக்குது
எட்டி மிதிக்க வருகுதடி—காலால்
எட்டி மிதிக்க வருகுதடி!



5. நெஞ்சில்—
சற்றுமே அன்பின்றிச்
சண்டை பிடித்திடத்
தாயின்மேல் பாய்வதைப் பார்த்தாயோடி—தன்
தாயின்மேல் பாய்வதைப் பார்த்தாயோடி?

6. அதன்—
பட்டு உடம்பினைத்
தொட்டுவிட் டால்உடன்
முட்டிட மெல்லத் திரும்புதடி—என்னை
முட்டிட மெல்லத் திரும்புதடி!

7. அன்பாய்—
நாங்கள் இடுகிற
நல்ல பசும்புல்லை
நாசம் அடித்துக் குதிக்குதடீ—நன்றாய்
நாசம் அடித்துக் குதிக்குதடீ!

8. இந்தத்—
தங்கத்தின் கொட்டத்தைத்
தட்டி அடக்கிடத்
தந்திரம் ஒன்றுநீ சொல்வாயோடி—உற்ற
தந்திரம் ஒன்றுநீ சொல்வாயோடி?



# லீடர் மணி

'ஆர்வி'

சொர்க்கலோகம் என்று நினைத்த பட்டணம் எங்கே, இதோ பார்க்கிற பட்டணம் எங்கே? மணிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் புரியத் தொடங்கியது. மனுஷ்யர்கள் எங்கே இருந்தாலும் அது சொர்க்கமாக எப்படி இருக்கும்? சங்கரபுரத்திலாவது மனிதர்கள் கொஞ்சம் உறவுபோலத் தோன்றினார்கள். ஆனால் இங்கேயோ மனிதர்கள் எல்லாரும் முற்றிலும் அந்நியர்களைப் போலவே இருந்தார்கள். நிற்கக்கூட ஒருவருக்கும் நேரமில்லை. பேசினால் ஒட்டிக் கொண்டு விடுமோ என்று சதா பயந்துகொண்டேயிருந்தார்கள். தங்களைத் தவிர பிறரை மனிதர்களைச் சேர்ந்தவர்களாகவே கருதவில்லை. ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதற்கு இருப்பதாகவே எண்ணினார்கள். மணிக்கு இப்படித்தான் அநுபவம் உண்டாயிற்று. சென்னையிலே கிடைக்காத பொருள் எதுவுமே இல்லை என்றார்களே! ஆனால் ஒன்று மட்டும் கிடைக்கவே கிடைக்காது என்று அவனுக்குத் தோன்றியது. மருந்துக்குக்கூட ஒருவரிடமும் கருணை என்ற பொருள் இருப்பதாகவே அவனுக்குப் படவில்லை. அன்பாக, அருமையாக ஒரு வார்த்தை சொல்லக்கூட ஒருவராலும் முடியவில்லையே! இதை நினைத்து நினைத்து மணி ஏங்கிப் பொருமினான்.

பட்டணத்து மனுஷ்யர்கள்தான் இப்படியிருக்கிறார்கள் என்றால் பட்டணத்து வெயிலும் அதைவிட மோசமாக இருந்தது. மைல் கணக்காக நீண்டிருந்த சாலைகளில் ஒதுங்கி நிற்போமென்றால் ஒரு பொட்டு நிழல் உண்டா? கிடையாது. ஒரு காட்டாமணக்குச் செடி கூடவா இருக்காது? பல இடங்களில் இருக்கிற மரங்களைக்கூட வெட்டித் தள்ளி, இருக்கிற வீடுகள் போதாதென்று புதுப் புது வீடுகள் கட்டிக்கொண்டிருந்தார்கள். வெயிலோ உச்சி மண்டையைப் பிளக்கிறது. தார் போட்ட சாலையோ காலோடு ஒட்டிக்கொண்டு பொசுக்குகிறது! என்ன பட்டணம் வேண்டியிருக்கிறது! பட்டணம்!

ராஜாக்கள் இருந்த அந்தக் காலத்திலே எங்கே பார்த்தாலும் சத்திரங்களும் சாவடிகளும் கட்டி வைத்தார்களாம். ராஜாக்களாகக் கட்டினவை சில; குடி மக்களில் செல்வந்தர்களாக இருந்தவர்கள் கட்டினவை பல. ஆனால் இந்தக் காலத்திலோ எந்தத் தெருவைப் பார்த்தாலும் பாதிக்குமேல் கடைகள்; சத்திரங்கள் இல்லை: அதற்குப் பதில் அந்த லாண்டு இந்த லாண்டு என்றும் பவன் என்றும் விலாஸ் என்றும் ஹோட்டல்கள். தண்ணீருக்குக்கூட அங்கே உள்ளே நுழைய முடியாது. எதற்கெடுத்தாலும் காசு. இப்படி

மனிதர்களை மனிதர்கள் சுரண்டிப் பிழைப்பதற்காகவே ஒரு பெரிய நகரமா? நாகரிகமா? கடவுளே!

மணியினுடைய இளம் இதயத்திலே இத்தனை எண்ணங்களும் சுழன்று சுழன்று வட்டமிட்டன. தெருவுக்குத் தெரு ஐந்தாறு சோம்பேறிச் சிறுவர்கள் காலணுக்களாகக் குலுக்கிப் போட்டு ஏதோ விளையாடிக் கொண்டிருந்தார்கள். மணிக்கு அந்த ஆட்டம் என்னவென்று முதலில் புரியவில்லை. சிறிது நேரம் நின்று பார்த்த பிறகுதான் அது ஒரு சூதாட்டம் என்பது புரிந்தது. அந்த இடத்திலேயே நிற்கப் பிடிக்காமல் அவன் தலைதெறிக்க ஓடினன். பணம் வசூல் செய்து, பெரிய பெரிய கட்டடங்கள் கட்டி, திறந்து வைப்பதென்றும், மூடி வைப்பதென்றும் ஏதேதோ அடிக்கடி விழாக்கள் நடைபெறுகின்றன என்று அவனுக்குத் தெரிந்தது. ஆனல் ஊரில் இத்தனை பிள்ளைகள் படிப்பும் இல்லாமல் வேலையும் இல்லாமல் சோம்பேறிகளாகச் சுற்றுகிருர்களே! இவர்களுக்கு நல்ல வழி காட்டுபவர்கள் ஒருவரையுமே காணுமே!

பசியினலேயே செத்துப் போய் விடுவோமோ என்று ஆகிவிட்டது அவனுக்கு. அதனல் யார் வீட்டிலாவது போய் வேலைக்காரன் போல வேலையாவது செய்யலாம் என்று எண்ணி, பல வீடுகள் ஏறி இறங்கினன். பெரிய பெரிய பங்களாக்களுக்குள்ளேயே நுழைய முடியவில்லை.



கடைகளுக்குச் சென்றால் கழுத்தைப் பிடித்துத் தள்ளினார்கள்.

பசி என்றால் சாமானியப் பசி இல்லை. மயக்கம் போடுகிற பசி உடலை வாட்டியது. மனசிலே துளித் தைரியம் இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம். பசியைக் கூட மறந்துவிடலாம். அந்தத் தைரியம் எப்படி ஏற்படும்? எங்கே போனாலும்தான் விரட்டுகிறார்களே! எங்கே போனாலும் தான் முகம் கொடுத்துப் பேச மாட்டேன் என்கிறார்களே! தைரியம் எப்படி உண்டாகும்? இதற்கு நடுவிலே கங்கனுடைய ஞாபகம் வேறு.

அவனால் நடக்கவே முடியவில்லை. மூன்று நாட்களாகக் குழாய்த் தண்ணீர்தான் ஆகாரம். அவ



னுக்கே உடம்பில் மூச்சு எப்படி இன்னும் இருக்கிறது என்று ஆச்சரியமாக இருந்தது. வாயைத் திறந்து பேசவே சக்தியில்லை. காது இரண்டும் கொட கொட வென்று அடைத்துக்கொண் டிருந்தது. பேசினால் காது ஜவ்வு படபட வென்று சத்தம் போட்டது.

அவனுக்குத் தன்னம்பிக்கை போய்விட்டது. மனிதர்களிடம் உள்ள நம்பிக்கையும் போய் விட்டது. ஒரு தெய்வம் பாக்கி யில்லாமல் வேண்டி வேண்டி அந்த நம்பிக்கையும் போய் விடும் போலிருந்தது. இனிமேல் எதன் மேல் நம்பிக்கை வைப்பது? நம்பிக்கை லவலேசமாவது இல்லா விட்டால் எப்படி உயிர் வாழ்வது?

நான்காம் நாள் காலையில் எதிர் பாராத காரியம் ஒன்று நிகழ்ந்தது. முன்பு பாலர் பவனத்தில் கண்டானே அந்த நம்பருள்ள கார் வீதியில் செல்வதைப் பார்த்தான். ஆனால் அதனோடு எப்படி ஓட முடியும்? அவன் உடம்பில் சிறிதாவது தெம்பு இருந்தால்தானே? அந்தக் காரில் இருந்த அம்மாள் கொஞ்சம் நல்லவள் என்ற எண்ணம் மட்டுமே அவனுக்கு அன்று முதலே இருந்தது. ஆனால் இப்போது அந்த அம்மாள் காரில் எங்கே போகிறாளோ?

அந்தக் காரை விடாமல் பின் பற்றி அவன் கண்கள் சென்றன. கூர்ந்து கவனித்த கண்கள் பார்த்துக்கொண்டே யிருக்கும்போது விசாலமடைந்தன. ஏனென்றால் ஒரு பர்லாங்குத் தூரத்தில் இருந்த பங்களாவுக்குள் கார் வளைந்து திரும்புவதை அவை கண்டுவிட்டன. கெட்ட காலத்தில் இந்த ஒரு சிறு நன்மையாவது உண்டாயிற்றே! அலை எறியும் சமுத்திரத்தில் அகப்பட்டுக் கொண்டவனுக்கு, பற்றிக்கொள்ள ஒரு சிறு கொம்பு கிடைத்தது போல் இருந்தது அவனுக்கு. மெதுவாக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அவன் அந்தப் பங்களாவை நோக்கித் தள்ளாடத் தள்ளாட நடந்து சென்றான்.

நல்ல சகுனத்துக்கு அடையாளமாக வாசலில் முனீசுவரன் மாதிரி காவற்காரன் எவனும் நிற்கவில்லை. வாசல் மதிலைத் தாண்டியதும்

மாடி முகப்பில் அந்தக் கார் நின்று கொண்டிருந்தது. மணி மிகுந்த கூச்சத்துடன் 'போர்ட்டிகோ'வை அடைந்தான். கையும் காலும் துவண்டன. கண்ணும் காதும் பஞ்சடைந்திருந்தன. பசியினால் சிறு குடலைப் பெருங்குடல் கவ்விக் கொண்டிருந்தது. மனசில் கூச்சம்; அதைரியம்; பயமும் கூடத்தான். சிறு பையன்தானே!

வெகு நேரம் வரையில் வாசல் புறத்தில் யாரையுமே காணோம். உள்ளே ரேடியோவில் தொழிலாளருக்கான நிகழ்ச்சி கராமுராவென்று நடந்துகொண்டிருந்தது. ஒரே கூச்சலும் அமர்க்களமுமாய் இருந்தது. பிறகு மெல்ல ஒரு சின்னத் தலை எட்டிப் பார்த்தது. யாரோ ஒரு பையன் நிற்பதைக் கண்டதும், ''யாரு?'' என்று கிள்ளைக் குரலில் கேட்டது.

மணி தன்னை யாரென்று சொல்லிக்கொள்வான்! பேசாமல் நின்றான்.

அந்தக் குழந்தை வராண்டாவுக்கு வந்து, ''போ! எங்க அப்பா இல்லே! அம்மா ரெஸ்ட் எடுத்துக்கறா. இப்பப் பேச மாட்டாள்!'' என்றது.

மணி இப்போதும் பேசாமலிருந்தான்.

அந்தக் குழந்தை உள்ளே போய் விட்டது. இன்னொரு பையன் சற்றைக்கெல்லாம் வந்தான். அவன் மணியை யாரோ பிச்சைக்காரனைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டே போய்விட்டான். ஒன்றும் பேசவில்லை. மணி மட்டும் கொஞ்சம் அவன் பின்னாலேயே வந்து, ''தம்பி! உங்க அம்மா இருக்காங்களா?'' என்றான்.

அவன் கன அலக்ஷியமாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கிவிட்டுப் போனான். அவனைக் கேட்பதில் பிரயோஜனமில்லை என்று மணி வாசலில் வந்து, ''அம்மா, அம்மா'' என்று கூப்பிட்டான். அவன் குரல் அவனுக்கே கேட்டால்தானே! எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலக் கேட்டது. அதற்கும் பதில் இல்லை.

பிறகு, பத்து வயதிருக்கும், ஒரு பெண் வந்தாள். ''யாரு?'' என்றாள்.

''நான் உங்க அம்மாவைப் பாக்கணும்னு வந்திருக்கேன்.''

''எங்கம்மாவையா?''

''ஆமாம்.''

''சரி இரு; இருக்காளான்னு பார்க்கறேன்.''

அந்தப் பெண் உடனே உள்ளே போனாள். போய் கால் மணி ஆயிற்று; அரை மணி ஆயிற்று. போனவளைக் காணவேயில்லை. எத்தனை நேரம்தான் அவன் நிற்பது? அதனால் போர்ட்டிகோவின் கட்டைச் சுவரில் ஏறி உட்கார்ந்து கொண்டான். மயக்கம் கண்ணை இருட்டியது. அப்படியே கண்ணயர்ந்துவிட்டான். பிறகு சத்தம் கேட்கவே கண் விழித்துப் பார்த்தான். அந்தப் பெண்தான் திரும்பி வந்துகொண் டிருந்தாள்.

''ஆமாம்; யாரு நீ?''

இந்தக் கேள்வி மணிக்கு விசித்திரமாக இருந்தது. அவன் அப்போது முதல் காத்துக் கொண்டிருப்பதையே அவள் மறந்துவிட்டாள். கேள்விகளை முதலிலிருந்து புதிதாகக் கேட்கத் தொடங்கிவிட்டாள்.

மணி மீண்டும் சொன்னான். மனம் நோக, உடல் நோகச் சொன்னான். சொல்லச் சொல்ல அவன் குரல் அவன் காதுக்கே எட்டவில்லை. கிர்கிர்ரென்று எல்லாம் சுற்றுவதுபோலிருந்தது.

''எங்க அம்மாவையா பார்க்கணும்?'' என்று அந்தப் பெண் கேட்டுக்கொண்டிருந்தபோதே மணி மயக்கமடைந்து சுருண்டு கீழே விழுந்துவிட்டான். நல்ல காலம்; காரின் 'பம்ப'ரில் மண்டை அடிபடவில்லை. பட்டிருந்தால் மண்டையைச் சீவியிருக்கும்.

அந்தப் பெண் இதைப் பார்த்துப் பயந்து, ''அம்மா! அம்மா!'' என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடினாள். மணிக்கு அதற்கு மேல் என்ன நடந்தது என்றே தெரியாது. அவன் பிரக்ஞையற்ற நிலையில் விழுந்து கிடந்தான்.

(தொடரும்)

# சூழ்நிலை

## ரா. ஆறுமுகம்

பங்கஜமும் மரகதமும் சகோதரிகள். பங்கஜம் எட்டாம் வகுப்பிலும் மரகதம் ஏழாம் வகுப்பிலும் படித்துக்கொண்டிருந்தார்கள். மூத்தவள் பெரிய வாயாடி. வகுப்பில் மற்ற மாணவிகள் அரிசியிலிருந்து அணுக்குண்டு வரை எதைப் பற்றி அவளிடம் சந்தேகம் கேட்டாலும் தனக்குத் தெரியாதென்று மட்டும் அவள் சொல்லவே மாட்டாள். பிரசங்கமே செய்துவிடுவாள். படிப்பிலும் அப்படித்தான். உபாத்தியாயினி எந்தக் கேள்வி கேட்டாலும் சரி, அது தப்போ சரியோ என்றுகூட யோசிக்காமல் மளமளவென்று பதில் கூற ஆரம்பித்துவிடுவாள். அந்த வகுப்பின் விவாத சங்கத்திற்கு அவளேதான் தலைவி. அவளிடம் யாரேனும் தெரியாமல் வாயைக் கொடுத்துவிட்டால் தப்புவது கடினம். சாட்டையடிமாதிரி பதில் அளித்து எதிரிகளின் வாயை அடக்கிவிடுவாள். இண்டர் ஸ்கூல் விவாதப் போட்டிக்குப் பங்கஜத்தைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பியிருந்தார்கள். விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட விஷயம் பற்றிப் பலமாணவிகள் கருத்து நிறைந்த சொற்பொழிவாற்றினார்கள். பங்கஜத்தின் பேச்சில் அவ்வளவு பொருள் இல்லாவிட்டாலும் அவள் மேடைமீது வந்து நின்ற தோரணையும், மடமடவென்று மடை திறந்ததுபோலப் பேசிய விதமும், ஒரு பரபரப்பை



ஏற்படுத்திவிட்டன. நீதிபதிகள் அவளுக்கே முதற்பரிசைக் கொடுத்து விட்டார்கள். ஒவ்வொரு வருஷ வகுப்புப் போட்டியிலும் அவளுக்குப் பரிசு கிடைத்துக் கொண்டேயிருந்தது.

மரகதம், அக்காவுக்கு நேர் மாறானவள். யாரிடமும் அதிகமாகப் பேசவே மாட்டாள். தன் பாடமுண்டு தானுண்டு என்று இருந்து விடுவாள். பங்கஜம் வாய் வீச்சில்



கெட்டிக்காரி; மரகதமோ படிப்பில் எல்லோரையும் மிஞ்சியிருந்தாள். ஒவ்வொரு பாடத்திலும் தொண்ணூறு மார்க்காவது வாங்கி விடுவாள்.

பள்ளியின் வெள்ளி விழா ஏற்பாடுகள் நடந்துவந்தன. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஒவ்வொரு மாணவியைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென்று தலைமை ஆசிரியை கட்டளையிட்டார். அதன்படி ஏழாம் வகுப்பிலிருந்து மரகதத்தைத் தேர்ந்தெடுத்தார் அவ்வகுப்பு ஆசிரியை. ஆனால் மரகதமோ தன்னால் பேச இயலாதென்று கூறியும் ஆசிரியை விடவில்லை. "வெறும் புத்தகத்தை மட்டும் படித்துப் பாஸ் செய்துவிட்டால் போதாது. இம்மாதிரி விஷயங்களிலும் நல்ல தேர்ச்சி வேண்டும். ஒருமுறை மேடை ஏறி விட்டால் அப்புறம் எல்லாம் சரியாகி விடும்" என்று ஊக்கமளித்தார் ஆசிரியை. மற்ற மாணவிகளும் அவளை உற்சாகப்படுத்தினர். வேறு வழியில்லாமல் பேச ஒப்புக்கொண்டாள் மரகதம்.

வெள்ளி விழா ஆரம்பமாகப் பத்து நாட்கள்தானிருந்தன. 'படிப்பு முடிந்தபின் பெண்கள் சமூக சீர்திருத்த வேலையில் ஈடுபடலாமா அல்லது குடும்பப் பொறுப்பை ஏற்கலாமா?' என்பது பற்றித்தான் பேசவேண்டும். இதற்காகப் பள்ளியின் வாசகசாலையிலிருந்த புத்தகங்களையும் புரட்டினாள். படித்த மேதைகள் எல்லாம் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் என்று குறித்துக்கொண்டாள்.

பங்கஜம் அவளைக் கேலி செய்தாள். "அடியே, மரகதம்! இந்தப் புத்தகப் படிப்பெல்லாம் மேடைப் பேச்சிற்கு வந்து உதவாது. மேடை மீது நீ ஏறியதுமே கை கால்கள் நடுங்க ஆரம்பித்துவிடும். படித்ததெல்லாம் மறந்துவிடும். ஏன் வீணாகச் சிரமப் படுகிறாய்? ஆசிரியையிடம் சொல்லி, போட்டியிலிருந்து விலகிக் கொண்டுவிடு. நீ சரியாய்ப் பேசவில்லை என்றால் எனக்கும் கெட்ட பெயர்தான்" என்றெல்லாம் சொன்னாள்.

அதற்கு மரகதம், "அக்கா, பேசமுடியாதென்று தெரிந்தால் விழாவன்று லீவு சொல்லி விலகிக் கொண்டு விடுகிறேன். நீ கவலைப் படாதே" என்றாள்.

வெள்ளி விழா நெருங்கிக்கொண்டிருந்தது. பங்கஜம் அதற்காக ஒன்றும் தயார் செய்யவில்லை. மரகதமோ எல்லாவற்றையும் படித்துக் குறித்துக்கொண்டு அரை மணி நேரம் அழகாய்ப் பேசக் கற்றுக்கொண்டுவிட்டாள்.

"என்ன மரகதம், நாளைக்குப் பேச நீ தயார்தானே? நான் ஒன்று சொல்கிறேன். நீ மேடை மீது ஏறியதும் உன் முன்னால் அமர்ந்திருக்கும் அத்தனை

பேரும் ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக் கொண்டு விடு! அல்லது அவர்கள் இருப்பதாகவே நினைக்காதே. அப்போதுதான் உனக்குப் பேச்சு மளமளவென்று ஓடும்'' என்று உற்சாகப்படுத்தினார் ஆசிரியை.

பள்ளிக்கூடத்தின் பெரிய ஹாலில் மாணவிகளும், ஆசிரியைகளும், நகரப் பிரமுகர்களும் கூடியிருந்தார்கள். பேச்சுப் போட்டிக்கென நியமிக்கப் பட்டிருந்த பஞ்சாயத்தார்கள் ஐந்து பேர் மேடையின்மீது வந்து நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். அவர்களெல்லாம் இதர பள்ளிக்கூடங்களின் தலைமை ஆசிரியைகள். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியை மேடைமீது ஏறி அப்பள்ளியின் இருபத்தைந்து வருஷ சாதனைகளை எடுத்துக் கூறினார். அன்று நடக்கவிருக்கும் பேச்சுப் போட்டியில் முதன்மையாக வரும் பெண்ணுக்குத் தங்கப் பதக்கம் பரிசளிக்கப் படும் என்று சொன்னார்.

ஒவ்வொரு வகுப்பு மாணவியும் மேடைமீது வந்து பேசினாள். மரகதத்தின் பெயரைக் கூப்பிட்டதும் அவள் மேடைமீது தோன்றினாள். அவளுடைய வகுப்பு மாணவிகள் கைதட்டினார்கள். பஞ்சாயத்தார்களுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, அவள் பேச ஆரம்பித்தாள். எல்லோரும் கவனமாகக் கேட்டார்கள். ஆனால் அவளோ ஆசிரியை கூறியபடி அவர்களைக் கவனியாமல் மளமள வென்று பேசிக்கொண்டே போனாள். பெண்கள் தங்கள் படிப்பு முடிந்ததும் சமூகசேவையில் ஈடுபட்டு, குடும்பப் பொறுப்பை மறந்துவிட்டுத் திரிவதைவிட குடும்பத்தில் சிரத்தை காட்டி, குழந்தைகளை நல்லவர்களாக வளர்ப்பதே பெண்களின் கடமையாகும் என்று அழகாகப் பேசினாள். அதற்கு மேற்கோளாக உலகின் பல தேசங்களிலும் உள்ள பெரிய மேதைகள் சொல்லியுள்ள உதாரணங்களையெல்லாம் எடுத்துக் காட்டினாள். மரகதம் பேசிய தோரணையையும், வார்த்தைத் தெளிவையும், வேகத்தையும், எடுத்துக்கொண்ட விஷயத்திற்குப் பக்கபலமாகச் சொன்ன ஆதாரங்களையும் கவனித்த அவளுடைய ஆசிரியை பிரமித்துப் போனாள். பஞ்சாயத்தார்களும் அவளுடைய பேச்சைக் கேட்டுப் பரவசமடைந்தார்கள். அவளுடைய சிநேகிதிகளும் இதர மாணவிகளும் அடிக்கடி கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். அவளுடைய சகோதரி பங்கஜம் ஆச்சரியப்பட்டுத் திகைத்துப் போனாள்.

அவளுக்கு அடுத்தபடியாகப் பங்கஜம் பேச மேடைமீது ஏறினாள். அவள் எப்போதும் நன்றாய்ப் பேசுவாள் என்பது எல்லோருக்குந் தெரிந்ததுதானே. அதனால் கை தட்டல் அதிகமாயிருந்தது. பெண்கள் சமூக சேவையில்தான் ஈடுபடவேண்டும் என்று விளக்கினாள். தனக்கு முன் பேசிய தன் தங்கையை எதிர்த்துப் பேசினாள். ஆனால் அன்று அவளுடைய பேச்சில் ஜீவனில்லை; உற்சாகமில்லை;



சப்பென்று இருந்தது. பத்து நிமிஷம் பேசிவிட்டு இறங்கிவிட்டாள். அதற்குப் பின் பல வகுப்பு மாணவிகள் பேசினார்கள். அவர்களுடைய பேச்சும் அப்படித்தானிருந்தது.

கடைசியில் பஞ்சாயத்தார்கள் தங்கள் முடிவைத் தெரிவித்தார்கள். முதல் பரிசு, தங்கப் பதக்கம், மரகதத்திற்கு! இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம் அவளுடைய தமக்கை பங்கஜத்திற்கு!! மரகதம் பரிசைப் பெற மறுபடியும் மேடை மீது தோன்றியபோது மாணவிகள் அளவுக்கு மேல் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். பங்கஜம் இரண்டாவதாக வந்ததும், ''தோல்வி, தோல்வி'' என்று கத்தினார்கள். அவளுக்கு முகத்தில் ஈயாடவில்லை. யாரிடமும் பேசக்கூட மனமில்லாமல் பங்கஜம் நேரே வீட்டிற்குப் போய்விட்டாள். கூட்டம் கலைந்தபின் பள்ளியின் தலைமை ஆசிரியை மரகதத்தைத் தன் அறைக்குக் கூட்டிப் போய் அவளைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து, ''இனி அடிக்கடி நடைபெறும் கூட்டங்களில் எல்லாம் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று யோசனை சொன்னார். மரகதத்தின் சிநேகிதிகள் எல்லாம் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''ஏண்டி, இவ்வளவு நாளும் இந்தப் பேசும் கலையின் ரகசியத்தை மறைத்துத்தானே வைத்திருந்தாய்?''

''இதில் விசேஷம் என்னவென்றால், தங்கை அக்காளைத் தோற்கடித்து விட்டாள்!''

''இனி அந்த வாயாடி, மௌனியாகிவிடுவாள். இந்தப் பேசா மடந்தை வாயாடியாகிவிடுவாள்!''

வெள்ளி விழா சம்பவத்திற்குப் பிறகு பங்கஜம்-மரகதம் இருவர்களின் வாழ்க்கையிலும் பெரிய மாறுதல் திடீரென்று ஏற்பட்டு விட்டது. பங்கஜம் எந்த நேரமும் தன் அறையில் அமர்ந்து அதிகமாகப் புத்தகங்களையே கண்ணும் கருத்துமாய்ப் படிக்க ஆரம்பித்து விட்டாள். விவாத சங்கத் தலைமைப் பொறுப்பையும் விட்டு விட்டாள். அதற்கு நேர்மாறாக, சதா புத்தகமும் கையுமாக இருந்த மரகதம் புத்தகங்களைப் படிக்க நேரமில்லாமல் நகரில் உள்ள பல பள்ளிக்கூடங்களிலும் நடைபெற்ற கூட்டங்களுக்குப் பேசப் புறப்பட்டு விட்டாள். இதை அவள் விரும்பிச் செய்யவில்லை. மற்றவர்கள் அவளைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றார்கள். பேச்சில் தன் அக்காளையும் மிஞ்சிவிட்டாள் என்று பெயர் எடுத்தாள் மரகதம். பல போட்டிகளில் பதக்கங்களும் கோப்பைகளும் பெற்றாள். அக்காள் பங்கஜம் அதைக் கண்டு பொறாமை கொள்ளவில்லை. ஹைஸ்கூல் படிப்பு முடிந்தது. சில வருஷங்களுக்குப் பிறகு, பங்கஜத்திற்குக் கல்யாணம் நடந்தது. அவள் வீடும் குடித்தனமுமாகி விட்டாள். ஆனால் படிப்பு முடிந்த பின்புகூட மரகதத்தை அவளது சிநேகிதிகளும் பழைய ஆசிரியைகளும் நிம்மதியாய் இருக்க விடவில்லை. பல கூட்டங்களில் பேசும்படி அழைத்துச் சென்றார்கள். கல்யாண வயதையடைந்தும் பேச்சில் வல்லமை பெற்ற அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் குடும்பத்திலும் வாயாடியாக மாறிவிட்டால் என்ன செய்கிறது என்று தயங்கினார்கள் வரன்கள். வேறு வழியின்றி மரகதம் சமூக சேவகியாக மாறிவிட்டாள்! அதில் அவளுடைய பெயரும் புகழும் எல்லா இடங்களிலும் பரவியது.

''பெண்கள் சமூக சேவையில் ஈடுபடக்கூடாது. குடும்பப் பொறுப்பைத்தான் ஏற்று நடத்த வேண்டும் என்று பள்ளியின் வெள்ளி விழாக் கூட்டத்தில் பேசிய நீயே இன்று இப்படிப் பிரபல சமூக சேவகியாக மாறிவிட்டாயே?'' என்று அவளுடைய பழைய சிநேகிதி மரகதத்தைக் கேட்டாள் விளையாட்டாக.

''நான் என்ன செய்யட்டும்? சூழ்நிலை என்னை இப்படி மாற்றி விட்டது!'' என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னாள் மரகதம்.

# மூன்று சோதனைகள்

கே. கமலா

[நடிகர்கள்: ராஜகுமாரன், மந்திரிகள்: பாலன், நீலன். ராஜகுமாரிகள்: மஞ்சுளா, நந்தினி, சுநீதி.]

அரண்மனையில் ஒரு விசாலமான அறை. அதன் இரு பக்கமும் இருவாசல்கள். அறையின் மத்தியில் வேலைப்பாடமைந்த ஒரு மேஜை. அதைச் சுற்றி நாலைந்து ஆசனங்கள். ராஜகுமாரன் தனியாகச் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்கிறான். மிகுந்த யோசனைக்குப் பிறகு, வெள்ளை மந்திரியை நகர்த்துகிறான். அப்பொழுது மெதுவாகக் காலெடுத்து வைத்த வண்ணம் மந்திரி நீலன், ராஜகுமாரனின் அருகில் வந்து வணக்கம் செலுத்துகிறான். அதற்குள் மற்றொரு மந்திரியும் அங்கே வந்து நிற்கிறான். இருவரும் சைகையால் ஏதோ பேசிக்கொள்கிறார்கள்.

### காட்சி 1

பாலன்: ராஜகுமாரா!

ராஜ: (தலைநிமிர்ந்து) ஓஹோ, நீங்களா? வருக, வருக. ஆசனத்தில் அமருங்கள்.

நீலன்: இல்லை. உங்களுடன் மிகவும் முக்கியமான விஷயம் ஒன்றைப்பற்றிப் பேசவேண்டும்..

ராஜ: தாராளமாகப் பேசுங்களேன். தயக்கம் ஏன்?

பாலன்: ராஜகுமாரா, தங்களுக்கு உரிய வயது வந்துவிட்டது. எனவே நீங்கள் விரைவில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.

ராஜ: நீங்கள் சொல்வதும் சரி. இதோ இந்தச் சதுரங்கத்தில் அரசன் எவ்வளவு சிக்கலில் இருக்கிறான் தெரியுமா? அதைப் போலத்தான்..

நீலன்: அரசாங்கச் சிக்கலில் உங்களுக்கு உதவி செய்ய மந்திரிகளான நாங்கள் இருக்கிறோம். உங்கள் சொந்த விஷயங்களைக் கவனிக்க ஒரு ராணி வேண்டாமோ?

ராஜ: அன்பிலும், அறிவிலும், அழகிலும் சிறந்த..

மந்திரிகள்: உங்களை மணக்கத் தகுதிவாய்ந்த ராஜகுமாரியைப் பார்த்தால் கல்யாணம் செய்து கொள்வீர்களா?

ராஜ: எல்லாக் குணங்களும் உள்ள ராஜகுமாரி கிடைப்பாளா?

மந்திரி: மாளவ தேசத்து ராஜகுமாரிகள் மூவர் இன்று இந்த நகருக்கு வந்திருக்கிறார்கள். அரண்மனை விருந்துக்கு அழைக்க ஏற்பாடுகள் செய்து இருக்கிறோம்.

ராஜ: சரி, பார்ப்போம். உங்கள் விருப்பத்தையும் ஏற்பாடுகளையுந்தான் ஏன் மறுக்கவேண்டும்? ராஜகுமாரிகளை அழைத்து வாருங்கள்.

(மந்திரிகள், ராஜகுமாரிகளை அழைத்து வர ஆட்களை அனுப்புகிறார்கள்.)

ராஜ: நீங்கள் நல்ல காரியமே செய்திருக்கிறீர்கள். என் நன்மையில்தான் உங்களுக்கு எவ்வளவு அக்கறை!

நீலன்: ராஜகுமாரிகள் மூன்று பேருமே நல்ல அழகிகள்.

ராஜ: இருக்கலாம். எல்லோருமே அழகிகளாக இருந்தால் யாரைக் கல்யாணம் செய்து கொள்வது?

பாலன்: அவர்களில் யார் மிகவும் அறிவும் அன்பும் உள்ளவர்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களோ..

நீலன்: அந்த ராஜகுமாரியையே மணம் செய்து கொள்ளுங்கள்.

ராஜ: அப்படியானால் சில சோதனைகள் செய்து பார்க்கலாமே!

நீலன்: என்ன சோதனை செய்யலாம்?

பாலன்: அன்பிலும், அழகிலும் அறிவிலும் மிக்க ராஜகுமாரருக்கு ஏற்ற அழகியைத் தேர்ந்தெடுக்க மூன்று சோதனைகள் வைக்கலாம்,

நீலன்: அன்புள்ளவள் யார் என்று அறிவது முதல் சோதனை.

ராஜ: உப்புச் சோதனை ஒன்று வைக்கப் போகிறேன்.

பாலன்: பொம்மை போன்ற எலிச் சோதனை ஒன்றுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

நீலன்: நல்லது. நாங்கள் வேலைக்காரர்களைப் போல உடை அணிந்து கொள்கிறோம். அப்படி ஒரு சோதனை செய்கிறோம்.

**காட்சி 2**

[அரண்மனையில் மற்றொரு வாசல் அருகே வேலைக்கார வேஷத்தில் மந்திரி நீலன் நின்றுகொண்டிருக்கிறான்.]

பாலன்: (ராஜகுமாரிகள் வருவதைப் பார்த்துவிட்டு) ராஜகுமாரா, அவர்கள் வருகிறார்கள். தயாராக இருங்கள்.

(சுநீதி, மஞ்சுளா, நந்தினி ஆகிய மூன்று ராஜகுமாரிகளும் வருகிறார்கள்.)

ராஜ: வாருங்கள், வாருங்கள். அமருங்கள் ஆசனத்தில்.

மஞ்சுளா: மதிப்பில் உயர்ந்த மன்னர் புதல்வரைச் சந்திப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

ராஜ: அழகு, அறிவு, அன்பு மூன்றுமே தனித்தனி உருவங்களாக வந்திருப்பதுபோல் தோன்றுகிறது, உங்களைப் பார்த்தால்.

சுநீதி: உங்களுக்கு வேண்டிய ராஜகுமாரி, இந்த மூன்றும் உள்ளவளாக இருக்கவேண்டும் என்பது தானே உங்கள் ஆசை? எங்கள் மூவரிடத்தும் அன்பும், அழகும், அறிவும் பொருந்தியிருக்கின்றன. ஒரு வேளை ஏறத்தாழ வேண்டுமானால் இருக்கலாம். அதனால் நீங்கள் தயவுசெய்து எங்களைப் பிரித்துப் பேசாதீர்கள்.

நந்தினி: (மெல்லிய குரலில்) சுநீதி, நாவை அடக்கிப் பேசு.

[ராஜகுமாரன் இந்தச் சம்பாஷணையைக் கவனித்துவிடுகிறான். சுநீதி, அழகி மட்டும் அல்ல; அறிவும் நிரம்ப உள்ளவள் என்று உடனே உணருகிறான்.]

(ராஜகுமாரனைப் பார்த்து) உங்கள் புகழ் நாடு எங்கும் பரவிக் கிடக்கிறது.

ராஜ: பாராட்டைப் பெறுவது எளிது.



சுநீதி: உண்மையான புகழ் நாடெங்கும் பரவ இன்னும் மிகவும் பாடுபட வேண்டும்.

மஞ்: (சுநீதியைக் கண்களால் அடக்கியபடியே) சுநீதியும் உங்களைப் பாராட்டத்தான் பாராட்டுகிறாள். அவள் கொஞ்சம் வெகுளி. நினைத்ததை அப்படியே சொல்வது அவள் வழக்கம்.

ராஜ: அவள் வந்ததிலிருந்து அவளையேதான் நானும் கவனித்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் சொல்வது முற்றும் உண்மையே.

[ராஜகுமாரன் வேலைக்காரனிடம் உண்பதற்கு ஏதாவது கொண்டுவரக் கட்டளை இடுகிறான். மந்திரி நீலன் மூன்று வெள்ளிக் கிண்ணத்தில் பால் சுடச் சுடக் கொண்டு வருகிறான். இரண்டு ராஜகுமாரிகளும் சூடான பாலைக் கவனிக்காமல் எடுத்துச் சாப்பிடத் தொடங்கவே, சூடு தாங்காமல் கொட்டிக் கொள்கிறார்கள்.]

இருவரும்: (நந்தினியும் மஞ்சுளாவும்) சே, நல்ல வேலைக்காரன் இவன்! பாலை ஆற்றிக் கொண்டுவரக் கூடாதா? எங்கள் அரண்மனையாக இருந்தால் உடனே வேலையிலிருந்து தள்ளியிருப்போம்.

ராஜ: உங்களுக்குத் தவறு இழைத்த அவனை இப்பொழுதே..

சுநீதி: வேலையிலிருந்து விலக்கிவிடாதீர்கள். அவன் கை பொறுக்க முடியாதபடி, சூடான பாலைக் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்தான். பொறுத்திருந்து ஆற்றி உண்ணாதது நம் பிழை. எனவே அவனைத் தண்டிக்க வேண்டாம். மன்னித்து விடுங்கள் அல்லது நாங்களே மன்னிக்கிறோம்.

ராஜ: சரி, அப்படியே செய்கிறேன்.

(ராஜகுமாரிகள் சுநீதியைச் சரியாகக் கண்டிருக்கிறார்கள். அவர்கள் அணிய வேறு ஆடைகள் வருகின்றன.)

ராஜ: மன்னிக்க வேண்டுகிறேன். தவறு நேர்ந்துவிட்டது. வேறு ஆடை உடுத்திக் கொள்ளுங்கள். அதற்குள் நான் வேறு ஏதாவது உண்பதற்குக் கொண்டுவரச் சொல்கிறேன். (போகிறான்.)

[சிறிது நேரம் சென்றதும் ஒரு வேலைக்கா[illegible] சில





**தோ. மகன்:** அப்பா, இனிமே நமக்குக் காசுக்குப் பஞ்சமே இருக்காது! அதுக்கு ஒரு வழி செய்துப்புட்டேன்.

**தோட்டக்காரன்:** என்ன வழி?

**தோ. மகன்:** இந்தத் தோட்டத்திலே எதைப் போட்டாலும் தங்கமா விளையும்னு சொன்னியே - அதுக்காக வரிசையா நல்ல காசாகப் பாத்து ஊன்றி வச்சுட்டேன்!

—P. S. பரமசிவன்,
சைதாப்பேட்டை.

---

பட்சணத் தட்டுக்களை ஏந்தியபடியே ராஜகுமாரனைத் தொடர்ந்து வருகிறான். ராஜகுமாரிகளில் சுநீதி முதலில் எழுந்து மரியாதை செய்கிறாள். அவளைப் பார்த்துப் பிறரும் எழுந்து மரியாதை செய்கிறார்கள்.]

ராஜ: ராஜகுமாரிகளே, அமருங்கள். உங்களை நெடுநேரம் காக்க வைத்துவிட்டேன். மன்னிக்க வேண்டுகிறேன்.

[மேஜையின் மேல் சதுரங்கக் காய்கள் கொஞ்சம் மாறிக் கிடக்கின்றன. சிக்கலில் இருந்த வெள்ளை ராஜா பத்திரமான இடத்தில் சேர்ந்து விட்டதைக் கண்டு ஆச்சரியப்படுகிறான்.]

ராஜ: (கோபமாக) இங்கே யார் இந்தச் சதுரங்கக் காய்களைக் கலைத்தவர்கள்?

நந்தினி, மஞ்சுளா: சுநீதிதான் அதன் அருகே சென்றாள். ஏதோ யோசனை செய்துவிட்டு எதையோ நகர்த்தினாள். எங்களுடன் வர வேண்டாம் என்றால் அவள் கேட்பதே இல்லையே! (சுநீதியைப் பார்த்துக் கண்டிப்பான குரலில்) உன்னால் நம் குடும்பத்துக்கே கெட்ட பெயர் வந்துவிடும்போல் இருக்கிறது. உன்னை அழைத்து வந்ததே தவறு. இனிமேலாவது ஒழுங்காக இரு.

சுநீதி: சிக்கலில் தவித்த ராஜாக்களுக்கு யார் உதவி செய்தாலும் எப்பொழுதும் ஆபத்துத்தான்.

ராஜ: (சிரிப்புடன்) பரவாயில்லை, சுநீதி. உன் சிறிய செய்கையைப் பெரிதாக மதித்து விட்டேன்.

சுநீதி: யார் செய்த சோதனையோ நான் செய்வதெல்லாம் பிழையாகவே முடிகிறது.

ராஜா: இல்லை, நீ எதிலும் தவறே செய்யவில்லை. எல்லாவற்றிலும் நீ தேர்ச்சியே பெறுகிறாய்.

சுநீதி: (சிரித்துக் கொண்டே) பார்க்கலாம். அடுத்த சோதனையிலும் தவறு செய்யாமல் பார்த்துக் கொள்கிறேன்.

[நாம் சோதனைகள் செய்கிறோம் என்பதைச் சுநீதி எப்படி உணர்ந்தாள் என்று ராஜகுமாரன் வியக்கிறான். வேலைக்காரன் திண்பண்டங்களைத் தனித்தனியாக வைத்து விட்டதைக் கவனிக்கிறான்.]

ராஜ: நேரமாகிவிட்டது. சாப்பிட அமரலாமா?

(ராஜகுமாரிகள் மூவரும் ராஜகுமாரனும் சாப்பாட்டுக்கு உட்காருகிறார்கள்.

ராஜகுமாரிகள், தின்பண்டத்தில் ஒரு பகுதியை விண்டு வாயில் போட்டுக்கொள்கிறார்கள்.)

மஞ், நந்தினி: ஐயோ இனிப்புப் பண்டத்தில் உப்பை உங்கள் சமையற்காரன் அள்ளிப் போட்டுவிட்டானே. உடனே அவனை விரட்டுங்கள்.

சுநீதி: அது தெரிந்துதானே, ராஜகுமாரர் அதைத் தொடாமல் இருக்கிறார். அவருக்கு இது ஒரு வேடிக்கை போலத் தோன்றுகிறது.

ராஜ: (நடத்திய சோதனையைச் சுநீதி உணர்ந்துகொண்டே விட்டாளே என்ற மகிழ்ச்சியை மறைத்துக்கொண்டு) அதை ஒதுக்கி மற்றதையாவது சாப்பிடுங்கள்.

(சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டு முடிந்ததும் மூவரையும் அழைத்துக்கொண்டு பூந்தோட்டத்துக்குச் செல்கிறான். அங்கே நடந்துகொண்டிருக்கும் பொழுது தரையிலே ஓர் எலி குறுக்கே ஓடி ஓடி விளையாடுகிறது.)

மஞ்: ஐயோ! ஐயோ! எலி.. (கண்ணை மூடிக்கொள்கிறாள்.)

நந்: பயமாக இருக்கே, யாராவது துரத்துங்களேன். (ஓடுகிறாள்.)

சுநீதி: அக்கா, அது வெறும் பொம்மை எலி. இதற்கா பயப்படுகிறீர்கள்? பார்த்தால் தெரியவில்லையா?

ராஜ: உனக்கு மட்டும் அது பொம்மை எலி என்று எப்படித் தெரிந்தது சுநீதி? நீதான் அறிவிலும், அழகிலும், அன்பிலும் சிறந்தவள். உங்கள் மூவரில் சிறந்தவளைத் தேர்ந்தெடுக்கவே சோதனைகள் நடத்தினேன்.

சுநீதி: நீங்களோ, உங்கள் சோதனைகளோ! மனைவியைத் தேர்ந்தெடுக்க இவ்வளவு கடுமையான சோதனைகளா? உங்கள் மனம் என்ன கல்லா, இரும்பா? வேடிக்கையாக உங்கள் நாட்டுக்கு வந்த எங்களை இப்படியா நடத்துவது? மெல்லிய மனம் படைத்த எங்



குடியரசு தினத்தன்று டில்லியில் நடந்த மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதி ராஜன்பாபு ஏற்றுக்கொண்டார். படத்தில் மாணவிகளின் அணிவகுப்பு நடைபெறும் ஒரு பகுதியைப் பார்க்கலாம்,

---

களைக் கஷ்டபடுத்திய நீங்களும் நான் நடத்தும் சோதனையில் தேர்ச்சி பெற்றால்தான் உங்களைக் கைப் பிடிப்பேன். எங்கள் தந்தையிடம் நான் இதை உறுதியாகச் சொல்லிவிடப் போகிறேன்.

(போகிறாள். செல்லும் பொழுது ராஜகுமாரனைக் கடைக் கண்களால் பார்த்துக் கொண்டே செல்கிறாள்.)

நந்தினி: அவள் எப்பொழுதும் அகங்காரிதான்.

மஞ்: மரியாதை தெரியாதவள். உங்கள் கோரிக்கையை எவ்வளவு அலட்சியமாக மறுத்துவிட்டுப் போகிறாளே! நாங்கள் எங்கள் ராஜ்யத்துக்குப் போக அநுமதி தருகிறீர்களா?

ராஜ: இல்லை. நானும் உங்களுடன் உங்கள் தந்தையிடம் வரப் போகிறேன். சுநீதி நடத்தும் சோதனைகளில் வெற்றிபெற்று அவளை நிச்சயம் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன்.



# எந்த ஊர்?

கே. எஸ். பி



ராமுவும் சுப்புவும் நெருங்கிய நண்பர்கள், பாலும் நீரும் போல! சண்டை போட்டாலும் அவர்கள் நண்பர்கள்தான்; விளையாடினுலும் தோழர்கள்தான்.

ஒருவனுக்கு மற்றவன் துளியும் சளைத்தவன் அல்ல. யாரும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

ராமுவின் அப்பா கவர்ன்மெண்டிலே உத்தியோகம் வகிப்பவர். சுப்புவின் தந்தை ஒரு பிரபல மருந்துக் கடை உதவி மானேஜர். வருஷத்தில் ஆறுமாதம் 'பிஸினஸ்' விஷயமாகக் கல்கத்தா, டில்லி, பங்களூர் என்று சுற்றிக் கொண்டேயிருப்பார்.

மொத்தத்தில் அவர்கள் நண்பர்களான விதம் இப்படித்தான்:

''எங்கப்பாவுக்கு ஐந்நூறு சம்பளமாச்சே: அதோடே ரெயில்வே உத்தியோகம் வேறு..!'' என்று மார்தட்டிப் பேசினுன் ராமு.

''ஹூம், இவ்வளவுதானே! எங்கப்பாவுக்குச் சம்பளமே நானூறு! அது தவிர மொத்த வியாபாரத்திலே ரெண்டரை 'பர்ஸன்ட்' கமிஷன் வருமாக்கும். போதாக் குறைக்கு வெளியூர் போகச்சே எல்லாம் அம்பது, அறுபதுன்னு, 'பாட்டா' வேறே..!'' என்று கண்களை அகல விரித்தான் சுப்பு.

''ஆமாம் எங்கப்பா மாத்திரம் சும்மாவா! ரெயில்வே என்ஜினியர். வெளியூருக்கு அடிக்கடி ஆபீஸ் விஷயமாகப் போவார். அப்போ நிறையப் பணம் கொடுத்து அனுப்புவளாக்கும் செலவுக்கு! நேற்றுத்தான் சிலோன் லேருந்து வந்தா; வரச்சே ஒரு டின் நிறைய பிஸ்கட்டும்....!''

''ஐயோ, எங்கப்பா மாசம் பிறந்தா மூணு டின் சாக்லேட்டும் பாதாமும் வாங்குவா; சும்மா பீத்திக்காதே!''

அவர்கள் பேச்சுக்கு ஒரு முடிவே இராது. யாரும் தாழ்ந்து போகவும் விரும்ப மாட்டார்கள். கடைசி வரைக்கும் பேச்சு வலுப்பெற்றுக் கொண்டே வரும். இருவரும் ஆரஞ்சு மாதிரி முகத்தைச் சுளித்துக்கொண்டு போய் விடுவார்கள்.

ஆனுல் மறு நாளே சமாதானம் நிலவிவிடும். சுப்பு ராமுவைத் தேடுவான். ராமு சுப்பு வீட்டில் காத்திருப்பான்.

* * *

திடீரென்று உண்மையாகவே அவர்களுக்குள் தகராறு வந்து விட்டது. இதுவரைக்கும் இவ்வளவு பெரிய சண்டை மூண்டதே இல்லை.

ராமுவின் அத்திம்பேர் டில்லியிலிருந்து வந்திருந்தார், ஆறுமாதம் கழித்து. ராமு மூன்று நாள் விடிய விடிய வீட்டை விட்டு நகரவேயில்லை.

அத்திம்பேர் கொண்டு வந்த விதம் விதமான சாக்லேட்டையும் பிஸ்கட்டையும் விட, அவர் வாங்கி வந்த சில்க் சட்டையும் 'டிரேட்' ஆட்டமும் அவனுக்குப் பிடித்துவிட்டன.

எப்போதுமே நல்ல வாளிப்பு; உருண்டை முகம், பங்களூர் சூரிய காந்தி மாதிரி! சில்க் சட்டையைப் போட்டதும் அசல் ராஜகுமாரன் தான்! மூன்று நாள் வளைய வளைய வீட்டைச் சுற்றி வந்தான்.

சுப்புவுக்குத் தாங்கவில்லை. நான்காவது நாள் காலையில் ராமுவைத் தேடிக்கொண்டு வந்தான்.

''ஏண்டா மூணு நாளா விளையாட வரல்லே...!''

':ஆமாம், விளையாட்டு முக்கியமா, அத்திம்பேர் முக்கியமா?''

''அப்போ உங்க அத்திம்பேர்...!''

''ஆமாம். அவர் வந்திருக்கச்சே உன்னோடே விளையாட வருவேனாக்கும், உனக்குத்தான் அத்திம்பேர் கிடையாதே..!''

சுப்புவுக்குச் சுருக்கென்று முள் தைப்பது போல இருந்தது. உண்மையிலேயே அவன் வீட்டுக்கு ஒரே பிள்ளை. அக்கா கிடையாது.

தலை தொங்கி விட்டது சுப்புவுக்கு. ரோஷம் ஏறியது தலைக்கு.

''அப்போ அத்திம்பேரோடேயே கொஞ்சிக் குலாவிண்டிரு. எங்கிட்டே இனிமே வந்தாயோ..!''

வீருப்பாகப் பேசி விட்டானே தவிர, உள்ளம் ராமுவைப் பற்றியே சிந்தித்தது. குட்டி போட்ட பூனைபோல வீட்டைச் சுற்றி வளைய வந்தான்.

ஒரு வாரம் கழிந்திருக்கும். அன்றைய கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸில் டில்லிக்குக் கிளம்பினார் ராமுவின் அத்திம்பேர்.

ராமுவுக்கு வீடு வெறிச் சென்று இருந்தது.

'டிரேட்' ஆட்டத்தை எடுத்துக் கொண்டு சுப்புவின் வீட்டுக்கு ஓடினான். சுப்பு வாயைத் திறந்து பேசவில்லை. கோபம் அவன் வாயை அடைத்திருந்தது. ராமு வந்த வழியே திரும்பி விட்டான்.

நாலு நாட்கள் தோழர்கள் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. இவன் தலையைப் பார்த்ததும், அவன் தலை மறையும். அவன் முகத்தைப் பார்த்ததும் இவன் முகம் வேறு புறமாய்த் திரும்பிக் கொள்ளும்.

ஐந்தாவது நாள். ராமுவின் அப்பாவை, சென்னையிலிருந்து திருச்சி ஆபீசுக்கு மாற்றி விட்டார்



கள். ஊரை விட்டுப் போகும் போதாவது நண்பனேடு பேசக் கூடாதா என்று சுப்புவின் வீட்டைத் தேடிச் சென்றன அவன் கால்கள்.

சுப்பு 'உம்'மென்று இருக்கவில்லே—பழைய சுப்புவாகி விட்டான்.

''வாடா ராமு..!''

ராமுவுக்குத் தொண்டையிலே அடைத்துக் கொண்டது.

''எங்கப்பாவுக்கு வெளியூருக்கு...!''

சுப்பு சிரித்தான்.

''அட பாவமே! எங்கப்பாவுக்குக்கூட அப்படித்தானும். மருந்துக்கடை 'பிராஞ்சு' ஆரம்பிக்கருளாம். அதுக்கு எங்கப்பாவை மானேஜராக..!''

''எந்த ஊருக்காம்..!''

''அதுதான் தெரியல்லே! நாளேக்குத் தெரியுமாம்..!''

சிட்டுக் குருவிகள்போல் ஒன்றியிருந்த நட்புத் தெய்வங்கள் பிரியா விடைபெற்றன.

* * *

**ப**தினைந்து நாள் கழித்து ஒரு நாள் காலே—

திருச்சி நகரத்தின் விசாலமான ஒரு வீதி வாசல்.

''ப[illegible]க்காய், [illegible], பச்சை மிளகாய், இஞ்சி..!'' என்று கறிகாய்க்காரி உரக்கக் கூவினுள்.

''ஒண்ணும் வேணும் போ, ராத்திரியே வாங்கிட்டாங்களாம்..!'' என்று சொல்ல வாசலுக்கு வந்தான் ராமு.

எதிர் வீட்டிலே சலசலப்பு கேட்டது. நேற்றைய இரவிலிருந்தே அந்த வீடு சற்று கல கலவென்றிருந்தது. யாரோ புதிதாகக் குடி வரப்போவதாகக் கேள்விப்பட்டான் ராமு.

அரை மணிக்கெல்லாம் நிதானமாக ஒரு டாக்ஸி வந்து நின்றது.

கண்களேக் கசக்கிக் கசக்கிப் பார்த்தான், சந்தேகமே யில்லே. சுப்புவின் தந்தைதான்! அவர் இறங்கியதும் தொப்பென்று குதித்தான் சுப்பு.

''சுப்பு..!''

''அடே ராமுவா—!''

''உ ——....உங்கப்பாவுக்கும் இந்த ஊருக்குத்தான 'டிரான்ஸ்பர்'....!''

''ஆமாண்டா, இதுதான உன் வீடு..!''

ராமு தலேயை அசைத்தான்.

''அடே ராமு! நம்ம நட்பைப் பிரிக்க ஆண்டவனுக்கே விருப்பமில்லேடா! அதனுலேதான் நம்ம ரெண்டு பேர் அப்பாவுக்கும் ஒரே ஊருக்கு மாற்றலாகி யிருக்கு..!'' என்று ராமுவின் கைகளேப்பற்றினன். குரலேக் கேட்டு வாசலுக்கு வந்த ராமுவின் தந்தை மிரள மிரள விழித்தார்.

''அடே நம்ம சுப்புவா! ரைட்டோ. இங்கேதான் வரப்போறதா கேள்விப்பட்டேன்!..'' என்று சிரித்தார்!

## என் வயது என்ன?

வகுப்பில் உபாத்தியாயர் என்னேப் பார்த்து, ''உன் வயது என்ன?'' என்று கேட்டார். எனக்குத் தெரியவில்லே. அப்பாவைக் கேட்டு தெரிந்துகொண்டு நாளேக்குச் சொல்வதாகச் சொன்னேன்.

அப்பாவைக் கேட்டதற்கு, ''பதினுன்கு ஆண்டுகள் கழித்து உன் வயது இப்போது உள்ளதைப் போல் மூன்று மடங்காக இருக்கும்'' என்று பதில் சொன்னுர்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லே. மறுநாள் உபாத்தியாயரிடம் அப்பா சொன்னதை அப்படியே ஒப்பித்துவிட்டேன். என் வயதை நீங்கள்தான் சொல்லுங்களேன்.

விடை: 40-ஆவது பக்கம்

# சேதுவின் சபதம்

## நா. ஜகந்நாதன்

"ஏண்டா சேது! கோபாலனின் அண்ணவுக்குக் கல்யாணமாயிற்றே, போகலாமா? குமாரி விமலாவின் பரதநாட்டியம் பிரமாதமாக இருக்கும்! நாம் எங்கே ரெண்டு ரூபாயும், மூன்று ரூபாயும் கொடுத்து அந்த நாட்டியம் பார்க்கப் போகிறோம்! போகலாமா, கிளம்பு சீக்கிரம்!.." என்றான் மாதவன்.

சேதுராமன், "நான் வரவில்லை. வீட்டில் கொஞ்சம் வேலை இருக்கிறது. நீங்கள் வேண்டுமானல் போங்கள்" என்றான்.

"சரியான புஸ்தகப் பூச்சிடா இவன்! வீட்டில் என்ன வேலை, புஸ்தகத்தை உருப்போடுவான்"-இது சுப்பிரமணியம்.

"ஏண்டா! ஒரு நாள் சாயந்தரம் புஸ்தகத்தைத் தொடாவிட்டால், என்ன, தலையா வெடித்துப் போய் விடும்? தூ!" - இது சிவப்பிரகாசம்.

ஆனல் மாதவன் மட்டும் சேதுராமனை மறுபடி ஒருமுறை கல்யாணத்துக்கு வருகிறாயா என்று கேட்கவில்லை. "சரி, வராமல் போனல் அவனை விட்டு விடுங்கள்! நாம் மட்டும் போய்வரலாம்!" என்று கூறித் தன் நண்பர்களை அழைத்துக்கொண்டு கோபாலனின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். கிருஷ்ணமூர்த்தி, "மாதவா! சேதுராமனுக்கு நீதான் குளோஸ் பிரண்டு. நீ மட்டும் அவனை இரண்டாவது முறை வற்புறுத்திக் கூப்பிட்டிருந்தால் அவன் நிச்சயம் நம்மோடு வந்திருப்பான் என்று நினைக்கிறேன்" என்று கேட்டான்.

"இல்லை. அவன் நிச்சயம் வரமாட்டான் என்பது எனக்குத் தெரியும். ஏதோ ஒப்புக்காக அவனைக் கூப்பிட்டேன்...." என்றான் மாதவன்.

"ஏன் வரமாட்டான்?" என்று கேட்டான் சுப்பிரமணியன்.

"இதுவரை எத்தனையோ கல்யாணங்களுக்கு நான் அவனை அழைத்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் ஏதாவது காரணம் சொல்லி நழுவிவிடுவான். இதில் ஏதோ விஷயமிருக்கிறது. அவனை இதுபற்றி ஒரு நாள் கேட்கவேண்டும்" என்று முடிப்பதற்கும், கல்யாண வீடு வருவதற்கும் சரியாக இருந்தது.

ஒன்பதாவது, பத்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த இவர்கள் குமாரி விமலாவின் நாட்டியத்தை எப்படி ரஸித்தார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

மறுநாள் பள்ளிக்கூடத்தில் சேதுராமனைச் சந்தித்து மாதவன், "சேது! கல்யாணங்களுக்கே போவதில்லை என்று நீ சபதம் செய்திருப்பதாக அன்றைத் தினம் சொன்னயே.. இப்போது எனக்கு அந்தக் காரணத்தைச் சொல்கிறாயா?" என்று கேட்டான்.

சேதுராமன், சாயந்தரம் எல்லோரும் பீச்சுக்குப் போகும்போது சொல்லுவதாகச் சொன்னன். மாலை எப்போதும்போல் எல்லோரும் பீச்சுக்குப் புறப்பட்டுப் போனர்கள். சேதுராமனின் வாயைக் கிளற அவன் சொன்ன கதை பின்வருமாறு:

மூன்று வருடங்களுக்கு முன்னல் ஒரு சம்பவம் நடந்தது. சேதுராமன் ஆறுவது படித்துக்கொண்டிருந்தான். அன்று, அவனது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த ராமகிருஷ்ணனின் அண்ணவிற்குக் கல்யாணம். அவன் தகப்பனர் சர்க்காரில் பெரிய உத்தியோகஸ்தர். கல்யாணம் எவ்வளவு தடபுடலாக இருந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டுமா, என்ன? வகுப்பில் இருந்த எல்லாப் பையன்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அழைப்பு இதழ்

கொடுத்திருந்தான். அவன் தகப்பனார் வேறு அழைத்திருந்தார்.

அன்று விடுமுறையாதலால் மாலை ஐந்து மணிக்குப் பள்ளியில் மாணவர்கள் சேர்ந்து செல்லத் தீர்மானித்திருந்தோம். எல்லாப் பையன்களும் சேர்ந்து இரண்டு புத்தகங்கள் வாங்கினார்கள். ஆறாவது வகுப்பு 'ஏ' செக்ஷன் மாணவர்களின் அன்பளிப்பு என அதில் அழகாகப் பொறிக்கப்பட்டிருந்தது. சேதுராமன் பலே குஷியாக இருந்தான். எப்போது சாயந்தரம் வரும், எப்போது ராமகிருஷ்ணனின் வீட்டிற்குப் போகலாம் என்று மிகவும் ஆவலோடு காத்துக்கொண்டிருந்தான். ராமகிருஷ்ணனின் வீட்டுக் கல்யாணம் தடபுடலாயிருக்கும் என்பதற்காக மட்டுமல்ல; சாப்பாடு பிரமாதமாக இருக்கும் என்பதும் அவனுக்கு அவ்வளவு உற்சாகத்தைக் கொடுக்கவில்லை; விதவிதமான வர்ண விளக்குகள் போட்டு, கல்யாணப் பந்தலை தேஜோமயமாக ஆக்கியிருப்பார்கள் என்று சொன்னதுகூட அவனுக்கு ஆவலைத் தரவில்லை. ஆனால் அன்று சங்கீத உலகில் மிகவும் பிரசித்திபெற்றவரும், சினிமா உலகில் புகழ் வாய்ந்தவருமான ராஜசுந்தரம் பிள்ளையின் சங்கீதக் கச்சேரி நடக்கப் போகிறது என்று கல்யாண நோட்டீஸில் போட்டிருந்ததுதான் அவனது ஆவலைத் தூண்டிவிட்டிருந்தது. கச்சேரி என்றால் அவனுக்கு உயிர். அதிலும் ராஜசுந்தரம் பிள்ளையின் கச்சேரி என்றால் பாதாம் அல்வா சாப்பிடுவது போல் இருக்கும் அவனுக்கு. ஆகவே ராமகிருஷ்ணன் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகவேண்டுமென்று எப்போதோ நிச்சயித்துவிட்டான்.

மணி இரண்டாயிற்று. கல்யாணத்துக்குப் போட்டுக்கொண்டு போக, பீரோவைத் திறந்து நல்ல ஸில்க் ஷர்ட் ஒன்று எடுத்தான்; அதற்கு எடுப்பாக இருக்கக்கூடிய மாதிரி ஒரு நிஜாரை எடுத்துவைத்தான். அதற்குள் அரைமணி பறந்துவிட்டது....தலைக்கு வாசனை எண்ணெய் தடவிக்கொண்டு அரைமணி நேரம் அதோடு மல்லுக்கு நின்று அதைப் படிய வாரினான்.. மணி மூன்றாயிற்று. 'இன்னும் இரண்டுமணி நேரத்தில் பள்ளிக்கூடத்தில் இருப்போம். அங்கிருந்து புறப்பட்டு ராமகிருஷ்ணன் வீட்டுக் கல்யாணத்திற்குப் புறப்படுவோம்.'-இவ்வாறு சேதுவின் மனத்தில் இன்ப அலைகள் துள்ளி எழுந்தன. மணி மூன்றரை. முகத்தைச் சோப்பு போட்டுக் கழுவிக்கொள்ள நினைத்து அறையைவிட்டு வெளியே வந்தான். வாசலில் ஒரு ரிக்ஷா வந்து நின்றது. 'அந்த நேரத்தில் அங்கே யார் வரப்போகிறார்கள்?' என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டே வாசலுக்கு வந்தான். வண்டியிலிருந்து சேதுவின் தகப்பனார் தள்ளாடியபடி இறங்கி வாசற்படி ஏறினார்.

சேதுவின் தாயார், ''என்ன! உடம்புக்கு என்ன வந்துவிட்டது! சொல்லுங்கள்!'' என்று பதறிய



படி கேட்டாள். தகப்பனார் மெது வாக, ''ஒன்றுமில்லை. லேசாகத் தலையை வலிக்கிறது. ஆபீஸில் சொல்லிவிட்டு வந்துவிட்டேன்'' என்றார். சேதுவின் தாயாருக்குத் தெரிந்துவிட்டது. காய்ச்சல் அதிக மாக இருந்தது.

அவன் தாயார் பற்று அரைத்து அவர் தலையில் தேய்த்துக் கொண்டே, ''டேய் சேது! மணி ஐந்தானதும் டாக்டர் வீட்டுக்குப் போய்மருந்து வாங்கிக்கொண்டு வர வேண்டும். எங்கேயாவது வெளியே போய்விடப் போகிறாய்! மருந்து வாங்கிக்கொண்டு வந்து கொடுத்து விட்டு அப்புறம் எங்கே வேண்டு மானாலும் போ!'' என்றாள். சேது வின் முகத்தில் அசடு வழிந்தது. கச்சேரிக்குப் போகவேண்டும் என்று சொல்லலாமா, வேண்டாமா என்று மனம் துடித்தது. தாயின் முகத் தைப் பார்க்க முடியவில்லை.




மணி ஐந்தடித்தது. சேதுராமன் டாக்டர் வீட்டிற்குக் கிளம்பினான். டாக்டரிடம் எல்லா விஷயங்களை யும் கூறி, மருந்து கொடுக்கச் சொன்னான். டாக்டர் மருந்து எழுதிக் கொடுத்தார். அதைக் கம்ப வுண்டரிடம் கொடுத்தான். அவன் யார் யாருக்கோ மருந்து கலந்து கொடுத்துக்கொண் டிருந்தான், சேதுராமன் மனத்தில் ஒரு சபல புத்தி தலைதூக்கியது. ''ஐயா! இந் தச் சீட்டில் உள்ள மருந்தைக் கூட்டி வையுங்கள். ஒரு நிமிஷத் தில் வந்துவிடுகிறேன்'' என்று கூறி வெளிக் கிளம்பினான்.

அதோ! ராமகிருஷ்ணன் வீடு! தேஜோமயமான பந்தல்! சொல்ல முடியாத கூட்டம்! கல்லையும் கரைக்கும் இசைவெள்ளம்! சக மாணவர்களின் சந்தோஷ ஆரவா ரத்தோடு கூட்டமாய்ச் சேர்ந்து கொண்டான். அவர்கள் ஆரவாரத் தில் பங்கு கொண்டான். பாகவதர் பொழிந்து கொண்டிருந்த இசை வெள்ளத்தில் ஒரேயடி யாய் மூழ்கி விட்ட சேது, வீட்டிலிருந்து வந்த காரியத்தை மறந்தான். கம்பவுண்டரிடம் கூறிய தையும் மறந்தான்!

கச்சேரி முடியும்போது மணி ஒன்பது..சட் டென்று ஞாபகம் வரவே சேது டாக்டர் வீட்டிற்கு ஓடினான். சந்தடி இல்லை. கம்பவுண்டர் கடையைக் கட்டிக் கொண்டிருந் தான்.. ''சார்! சார்! என் மருந்துப் புட்டி சார்!'' - ஒருவழியாக மருந்து வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். கடிகாரத் தின் முள்ளைப் போல் அவன் மனம் திக் திக் கென்று அடித்துக்கொண் டிருந்தது.

அவன் தகப்பனாருக்கு ஜுரம் மிகவும் அதிக மாகி விட்டது; காலத் தில் மருந்து கொடுக்




காததால் ஜுரம் பிதற்றலில் வந்து நின்றது. என்னென்னமோ பிதற்றிக்கொண்டிருந்தார். அவன் தாய் கண்களில் நீர் வழிய பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். குடித்தனக்காரர்கள் சொல்லி இவைகளைத் தெரிந்துகொண்டான். ''ஏண்டா! அப்போது போனாயே, மருந்து வாங்கிக்கொண்டு வர! இவ்வளவு நேரமா? எங்கேடா போயிருந்தாய்?'' என்று யார் யாரோ என்னென்னவோ கேட்டார்கள். அவன் தாய், வாய்திறந்து அவனை ஒன்றும் கேட்கவில்லை. அதுவே அவன்செய்த தவற்றை எடுத்துக் காட்டியது. சேதுராமனை அவள் அடித்தாலும் அவன் ஏற்றுக்கொள்வான்; ஆனால் அவள் அடிக்கவில்லை; அவள் பார்த்த பார்வை மட்டும் அவன் குற்றத்தைப் பன்மடங்கு பெரிதாக எடுத்துக்காட்டியது.

மறுநாள் ஜுரம் மேலும் அதிகரித்தது. டாக்டர் வந்தார். ''நேற்றுச் சாயந்தரமே ஒரு டோஸ் மருந்து கொடுத்திருந்தால், ஜுரம் குறைந்திருக்குமே! நான் ஆறு மணிக்கே உங்கள் பையனிடம் மருந்து கொடுத்தனுப்பினேனே! நீங்கள் ஏன் அப்போது மருந்து கொடுத்திருக்கக்கூடாது?'' என்று டாக்டர் கோபித்துக்கொண்டார். அடுத்த அறையில் இருந்த சேதுவின் இதயத்தில் இச்சொற்கள் ஈட்டி போல் பாய்ந்தன. டாக்டர் மருந்து, இஞ்செக்ஷன் என்னென்னவோ கொடுத்துப் பார்த்தார். ஜுரம் தணிந்தபாடில்லை. வளர்ந்து கொண்டே வந்தது. அவ்வப்போது, ''அப்போதே அந்த மருந்தைக் கொடுத்திருந்தால், இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காதே!'' என்று சொல்வார். சேதுவைப் பிழிந்தெடுத்தன அந்த வார்த்தைகள். கடைசியில் 'டைபாய்டு' என்று கண்டுபிடித்தார் டாக்டர். ஆனால் அதினின்றும் காப்பாற்ற முடியவில்லை அவரால்!

சேதுவின் இதயம் சுக்குநூறாகியது. தான் செய்த தவறு எவ்வளவு பெரியது என்பதை உணர்ந்தான். கடமைக்குப் பிறகுதான் பொழுது போக்கு என்பது அவன் உள்ளத்தில் பதிந்தது. தன் தகப்பனாரின் உயிருக்கு எமனாக வாய்த்த அந்தக் கல்யாணத்துக்குப் போன பிறகு, சேது, வேறு எந்தக் கல்யாணத்திற்கும்இனி போவதில்லை என்று சபதம் செய்துகொண்டான். அதை இன்று வரை காப்பாற்றி வருகிறான்.

# ரேடியோ வகைகள்

*ராம. சுப்பிரமணியன்*

அன்புள்ள பிரமீளா,

உன்னிடமிருந்து கடிதம் வந்தது. நீ டில்லியில் நடந்த ரேடியோ விசேஷக் கண்காட்சியைப் பார்த்ததாக எழுதியுள்ளாய்.

நீ மண்ணெண்ணெயால் இயங்கும் ரேடியோ ஒன்றைப் பார்த்து அதிசயித்ததாக எழுதியிருக்கிருய். இன்றைய நிலையில் எதுவுமே அதிசயமல்ல. விநாடிக்கு விநாடி ஏதேனும் ஓர் அதிசயம் நிகழ்ந்தவண்ணமாகவே இருக்கிறது.

கடிகாரம் வந்த புதிதில் எல்லோரும் வியப்படைந்திருப்பார்கள். இன்று எத்தனையோ நுண்மையான கடிகாரங்கள் பல செய்து விடுகிருர்கள். ஒரே கடிகாரத்தில் விநாடி, நிமிடம், மணி இவைகளைக் குறிக்கத் தனித் தனி முள்ளும், தேதி, கிழமை, மாதம், வருடம் இவைகளைக் குறிக்கும் அமைப்பும் காண அதிசயமாகத்தான் இருக்கும். இன்று 15 ரூபாய் முதல் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விலையில் கடிகாரங்கள் இருக்கின்றன. மோதிரத்தில்கூட கடிகாரம் வந்து விட்டது என்றுல் பார்த்துக் கொள்ளேன்!

உனக்குத் தீப்பெட்டி ரேடியோ வைப்பற்றித் தெரியுமல்லவா? இதற்குப் பாக்கெட் ரேடியோ என்று மற்ருெரு பெயர்கூட உண்டு. தீப்பெட்டி அளவே உள்ள இந்த ரேடியோவில் குறிப்பிட்ட சில நிலைய ஒலிபரப்புகள் மட்டும் கேட்கலாம். இது இரண்டு வால்வுகள் கொண்ட ஒரு ஸெட்.

இன்று தொப்பி ரேடியோ ஒன்று வந்துள்ளது என்று நீ கேட்க அப்படியே அசந்து போவாய். நிஜமாகத்தான் சொல்கிறேன். தொப்பி ரேடியோவைப்பற்றி



உனக்கு விளக்கமாகச் சொன்னுல் நம்புவாய் அல்லவா? இந்த ரேடியோ போலீஸ்காரர்களுக்கு மிகவும் உபயோகமாகிறது. இது வைத்துக்கொண் டிருப்பவர்களுக்குத்தான் தெரியும். மற்ற யாருக்கும் இந்த ரேடியோ இருப்பது தெரியாது. பார்ப்பதற்குப் போலீஸ்காரன் தொப்பியைத் தான் அணிந்துகொண் டிருப்பது போல் தோன்றும். ஆனுல் உண்மையில் அந்தத் தொப்பியிலேயே இந்த ரேடியோ அமைக்கப் பட்டிருக்கிறது.

அதன் ஏரியல் ஒரு சிறு கம்பியளவே இருக்கும். அது யாருக்கும் புலனுகாதபடி தொப்பியின் மேல் பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும். இந்த ரேடியோ பாடாது. ஆனுல் செய்திகளை அனுப்பவும், செய்திகளை வாங்கிக் கொள்ளவும் தான் இது பயன்படுகிறது. இந்த ரேடியோவைக் கொண்டு சுமார் 20 மைல் தொலைவுக்குச் செய்தி





அனுப்பலாம். இந்த தூரத்திற்குட்பட்ட போலீஸ் நிலையங்களிலிருந்து செய்திகளை எளிதில் பெற்றுக் கொள்ளலாம்.

அவசரமாக ஒரு போலீஸ்காரனுக்கு உதவி தேவை என்றால், அவன் ரோந்து சுற்றிக்கொண்டிருக்கும் இன்னொருவனிடம், இந்த ரேடியோ மூலம் செய்தி அனுப்பி உதவி பெறலாம். ஆக, ஒவ்வொரு போலீஸ்காரனும் தன் தொப்பியில் ஒரு ரேடியோ வைத்துக்கொண்டிருப்பான். அவனுடைய தொப்பி அளவில் பெரிதாக இருப்பதால், ஒரு ரேடியோ, செய்தியை அனுப்பவும் இன்னொன்று செய்தியைப் பெற்றுக்கொள்ளவும் ஆக இரண்டும் ஒரே தொப்பியில் பொருத்தப்பட்டிருக்கின்றன.

இது சிகரெட் பற்றவைக்கும் சிகரெட் லைட்டர் (Cigarette lighter) அளவுதான் இருக்கும். நான்கு வால்வுகள்கொண்ட ஸெட் இது. இதற்கு மின்சாரம் தேவையில்லையா என்று கேட்கலாம். அதற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது. சிறிய இரண்டு பாட்டரிகளைக் கொண்டு இதற்குத் தேவையான மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. இதனுடைய எடை எவ்வளவு தெரியுமா? மிகவும் குறைவுதான். ஐந்தே அவுன்ஸ்தான் இதன் நிறை. இது இரண்டு அங்குல நீளமும், இரண்டு அங்குல அகலமும், ஒரே அங்குல உயரமும் உள்ளது. இது இப்பொழுது அமெரிக்காவில்தான் அதிகமாக உபயோகப் படுகிறது. நம் நாட்டிலும் இந்த ரேடியோ வந்தால், போலீஸ்காரர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கும்! இதெல்லாம் சரி. கண்டுபிடித்தவரின் பெயர் சொல்லவில்லையே.

இதைக் கண்டுபிடித்தவரும் ஓர் அமெரிக்கர்தான். போலீஸ் இலாகாவிலேயே வேலை பார்ப்பவர். நியூயார்க் நகரிலுள்ள அட்லாண்டிக் ஸிடி என்ற ஊரைச் சேர்ந்த லாரன்ஸ் ஹெட்ஸ்மித் என்பவர்தான் இதைக் கண்டுபிடித்தார். அவரும் ஒரு ரேடியோ நிபுணர்தானும்.

இதைப் படித்தவுடன் நமக்கும் ஏதாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆசையாகத்தான் இருக்கும். முயன்று பார்ப்போம்.

உன் அன்புள்ள அண்ணன்,

மணி.

---



**கோபு:** நீ சொல்வதையெல்லாம் நான் ஒப்புக்கொள்ள முடியாது. கண்ணால் பார்த்தால்தான் நான் 'சரி' என்பேன்.

**மணி:** உனக்கு மூளை என்பதே எப்பொழுதும் கிடையாது.

**கோபு:** எப்படிடா?

**மணி:** மூளை உன் கண்ணுக்குத் தெரியுமா?

—ஸ்ரீநிவாஸன், சூளைமேடு.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

**M.** 328. முருகேசன் K.A., கவுந்தப்பாடி. 329. மணவாளன் F. S., ஐயனுபுரம். 330. முருகேசன் M. N., கொண்டித்தோப்பு., சென்னை. 331. முரளி L., சென்னை 4. 332. முத்துக்குமாரசாமி M. களக்காடு. 333. முஹமது ஹுசேன்., சென்னை 1. 334. முருகையா A., மதுரை. 335. முனியப்பன் K., தாரமங்கலம். 336. முத்து G., அன்ஸான்,' மலாயா. 337. மகாதேவன் P. V., பாலா., சென்னை 4. 338. மாணிக்கவாசகம் G., சென்னை 7. 339. மாசிலாமணி T. V., சென்னை 3. 340. மகாலிங்கையர் T., சுன்னாகம், இலங்கை. 341. மங்கேசன் A. L., கீழக்கரை. 342. மீனாட்சி R., முல்லக்கல், ஆலப்புழை. 343. மணியன் V. S., சென்னை-1. 344. மோகனவல்லி A. S. சென்னை 4. 345. முஹமது இப்ராஹிம் J., கொப்பம்பட்டி 346. முருகேசன் A., திருச்செங்கோடு. 347. முருகநாதன் A., கீழக்கரை. 348. முத்தையா A. N., வளையப்பட்டி. 349, மாத்ருபூதம் R., துளசிதாஸ்., சிவகுமார்., ரர்மசந்திரன்., திருச்சி. 350. மூர்த்தி R., ஆண்டர்ஸன் பெட். 351. மார்த்தாண்டநாராயணன் K., லட்சுமிநாராயணன்., சென்னை 5. 352. முருகன் R., வளவனூர். 353. மணி G. P., செங்கல்பட்டு. 354. மாரிமுத்து T., சுங்பட்டாணி, கெட்டா மலாயா. 355. மருதன் M., வெள்ளாள பாளையம். 356. மூர்த்தி. K., புதுக்கோட்டை. 357. மக்பூப் அலி S. M., ஆழ்வார் திருநகரி 358, மோஸஸ் விக்டர் ஹார்பிங்கர்., டோனூர். 359. மாரியப்பன் S. P., சாந்தியூர். 360. முஹமத் பரூக்., ஈபோ, மலாயா. 361. மணியன் N. S. B., சாவகச்சேரி. 362. முனுசாமி S.. சென்னை 14. 363. மணி E. S., சென்னை 12. 364. அர்ஜுனன்., சோழ மண்டலம். 365. மாரிமுத்து G., மன்னார்குடி. 366. மாணிக்கம் P. S., கருணையம்மாள்., பல்லடம். 367. மோகனா S., சோழபுரம், கோழிக்கோடு. 368. மூர்த்தி J. S., புது டில்லி. 369. மாரிமுத்து M. K., சென்னிமலை. 370. மணியன் K. V. S. கணி

**இங்கே கத்தரிக்கவும்**

---

**கண்ணன் கழகம்**

**அங்கத்தினர் பதிவு கூபன்**

(கட்டணம் இல்லை)

பெயர் ..........................

விலாசம் ..........................

..........................

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

மார்ச், 1-'55 கூபன் செ:

ஹர். 371. மோஹன் ராவ் V., புனா 2. 372. முத்துராமன் S. P., வளவனூர். 373. முத்துசாமி G., ஐயன்பொமிகபுரம். 374. மனோஹரன் S., பெரம்பூர்; சென்னை. 375. மோஹன ராமன் A. Y., சிந்தாதிரிப்பேட்டை, சென்னை. 376. மகாலிங்கம் S., திம்மள் தீவு., இலங்கை. 377. முஹமதுயூஸப்.. சென்னை 5. 378. முத்துசாமி G., திருச்சி. 379. மன்னி ராஜேஸ்வரி., சென்னை. 380. மதனகோபால்K., சென்னை 21. 381. மருதாசலம் M. R., சின்னசாமி., கோயம்புத்தூர். 382. மகாலிங்கம் C., சரோஜினி C., திருச்சி. 383, மனோகரன் D., கீழ வெளியூர். 384. முஹமது S. M., இளயாங்குடி. 385. மணி S. S., கோயம்புத்தூர். 386. மூர்த்தி R. G., இலங்கை. 387. S. K., நாதன் S.V., பானு S., வில்லிவாக்கம். 388. மணி P., [ கோட்டூர், சென்னை-20. 389. மாதவன் S., நாவலப்பிட்டியா, 390. மகாதேவி C., சரஸ்வதி., சென்னை 4. 391. முத்துசாமி T., பெண்ணாடம். 392. மோஹன வேணு G., சென்னை-5. 393. முகமது ஹமீது R., திண்டுக்கல். 394. மாணிக்கம் N., கீழ வெளியூர். 395. முருகன் C. V., சென்னை 14. 396. முத்துசாமி M., சூலூர். 397. மோகன் தாஸ் A. V., கோயம்புத்தூர். 398. முத்தையா S., பலாஸ்கொடை. 399. மணி S. B.. புதுடில்லி. 400. மணி C. V., கோயம்புத்தூர். 401. மாலதி A., கும்பகோணம். 402. மகாதேவன் C., நெல்லூர்., யாழ்ப்பாணம் 403. மூர்த்தி V. S., கும்பகோணம். 404. மாரன் K. R., ஊதங்மெலின்தாங். 405. மஹேஷ் N., கோயம்புத்தூர். 406 மீனாக்ஷி R,, ஜயப்பூர். 407. மாசிலாமணி., கங்களாஞ் சேரி. 408. மீனாக்ஷி சுந்தரம் M., கோயில்பட்டி. 409. மோதிலால் S. S., உதகமண்டலம். 410. மணி M. S., பிரேம குமார்., திருச்சி. 411. R. S., டில்லி. 412. முத்து சுப்பிரமணியம் R., மதுரை, 413. மனோரமா V., சங்கர்.. சாத்தூர். 414. மாரிமுத்து K., ஈரோடு. 415. மைதிலி N. S., சென்னை 5. 416. மணி N. V. S,. சென்னை 4. 417. முஹமது பாவி S. M. S., யாழ்ப்பாணம். 418. மாலதி S., சேலம். 419. மாதவராமானுஜம் P., திருச்சி. 420. மதனகோபால் C. P., கல்கத்தா 26.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

## கண்ணன்

### கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

# பாரஸீக ரோஜா

சித்திரம்: ஸாமி




தெரிகிறது. எனக்குச் சித்தப் பிரமை என்று நீங்கள் வருந்துகிறீர்கள். இதோ பார்த்தீர்களா, மோதிரம்! நானே இதை அவள் கையிலிருந்து எடுத்தேன்!
என்ன ஆச்சரியம்?
பூதங்களின் வேலை என்பதை அறியாத காமர்முதல் நாள் இரவு தான் கண்ட பெண்ணைப் பற்றிக் கூறினன். அந்த மோதிரம் விலை மதிக்க முடியாத மோதிரமாய் இருப்பதைக் கண்ட கலீபா அந்தப் பெண்ணை எப்படியும் தேடிக் கண்டு பிடிக்கச் சொல்வதாகக் கூறி, அவனை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்.
இங்கே இப்படி இருக்க பாதுர் என்ன ஆனுள் என்று பார்ப்போம்....
பொழுது விடிந்து விட்டதே!
எங்கேடி அவர்?
யாரம்மா அவர்?
உண்மையைக் கூறுங்கள். நேற்று இரவு இங்கே தூங்கினரே!
அவர் எங்கே என்று தெரியாமல் என்முன்னே நிற்காதீர்கள்!
மன்னவரே! இளவரசி பாதுருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது!
என்ன?

(தொடரும்)

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

**கே. எஸ். ஷண்முகம்,**
**கொடுமுடி.**

கடிகாரத்தின் ஊசலி (Pendulum) எப்போதும் எவ்வாறு ஆடிக் கொண்டிருக்கிறது? காற்றின் நிறுத்து சக்தியால் அது தடைபடுவதில்லையா?

ஆடிக்கொண்டிருக்கும் ஓர் ஊஞ்சலில் ஒரு சிறுவன் வெறுமனே நின்றுகொண்டிருந்தால், அந்த ஊஞ்சல் மெதுவாக ஆடிக் கடைசியில் நின்று போகும். காற்றின் தடையே இதற்குப் பெரும்பான்மை காரணம்.

ஆனால், ஊஞ்சல் ஆடும்போது ஒவ்வொரு தடவையும் அதைச் சிறிதளவு முன்னேக்கித் தள்ளிக் கொண்டேயிருந்தால், அந்த ஊஞ்சல் நின்று போகாது; ஓயாமல் ஆடிக்கொண்டேயிருக்கும்.

ஒரு கடிகாரத்தின் ஊசலி ஆடும்போது இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்துகொண்டேயிருக்கிறது. கடிகாரத்தில் எஸ்கேப்மெண்டு (Escapement) என்னும் ஒரு கருவி இருக்கிறது. ஊசலி ஒவ்வொரு முறை ஆடும்போதும் அது ஊசலியைச் சற்றே தள்ளிவிடுகிறது. காற்றின் தடை முதலியவற்றல் ஊசலி இழந்துவரும் சக்தியை அது உடனுக்குடனே ஈடு செய்கிறது. ஆகவே கடிகாரத்தின் ஊசலி நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த எஸ்கேப்மெண்ட் கருவிக்குச் சக்தி எங்கிருந்து வருகிறது என்று கேட்கலாம். கடிகாரத்துக்குச் சாவி கொடுக்கும்போது நாம் ஒரு வில்லை அழுத்திச் சுற்றுகிறோம். அந்தச் சுருண்ட வில் பிரிந்து பழைய நிலையை அடைய முயலும்போது, அதில் அடங்கிய சக்தி வெளிப்படுகிறது. வெளிப்பட்டுப் பற்பல பல்சக்கரங்களின் வழியாகப் போதிய அளவில் சிறிது சிறிதாக எஸ்கேப்மென்ட் கருவிக்கு அளிக்கப்படுகிறது. இப்படி நடப்பதால் வில் பிரிந்து சக்தியிழந்து போகிறது. ஆகையால் அதில் மறுபடியும் சக்தியை திரளச் செய்வதற்கு அவ்வப்போது சாவி கொடுத்து வருகிறோம்.

**சி. பாலசுப்பிரமணியன்,**
**தஞ்சாவூர்.**

டெலிஸ்கோப்பை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம்? அதை எதற்கு உபயோகிக்கிறார்கள்?

வெறும் கண்களுக்குத் தெரியாத எட்டாத் தூரத்தில் உள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு டெலிஸ்கோப்புக்களை உபயோகிக்கிறார்கள். கரையிலிருந்து கப்பல்களையும் கப்பல்களிலிருந்து கரையையும் இவற்றல் பார்ப்பது எளிது. கடற்போரிலும் இவை உபயோகப்படுகின்றன.

ஆனல், போர்க் காரியங்களைக் காட்டிலும் சமாதான காரியங்களிலேயே இது அதிகமாகப் பயன்படுகிறது.

நக்ஷத்திர சாலைகளிலே மிகச் சிறந்த டெலிஸ்கோப்புகளை வைத்திருக்கிறார்கள். அவைகளைக் கொண்டு வானத்திலுள்ள பல வகைப் பொருள்களை வான சாஸ்திரிகள் கவனித்து வருகிறார்கள்.

டெலிஸ்கோப்புகளைப் படம் பிடிக்கும் காமிராக்களோடு இணைத்துக் கிரகங்களையும் சூரியனையும் நக்ஷத்திரங்களையும் படம் பிடித்து வருகிறார்கள். எட்டாத் தூரத்திலுள்ள பொருள்கள் பல இவ்வாறும் படம் பிடிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன.

லக்ஷக்கணக்கான ஒளி வருஷங்களுக்கு அப்பாலுள்ள நக்ஷத்திரங்களையும், நக்ஷத்திரக் கூட்டங்களையும் வானசாஸ்திரிகள் டெலிஸ்கோப்புகளின் மூலமாகப் படம் பிடிக்கிறார்கள். அவைகளின்

இடம், தன்மை, நிறம் முதலியவற்றை ஆராய்ந்து அறிவைப் பெருக்குகிறார்கள்.

சூரிய மண்டலத்தின் ஆதிக்கத்துக்கு உள்ளே வரும் தூமகேதுக்கள் (Comets - வால் நக்ஷத்திரங்கள்) பெரும்பான்மையும் சாதாரணக் கண்களால் பார்க்க முடியாதவை. டெலிஸ்கோப்புகளின் மூலமாக அவைகளைப் பார்த்துப் படம் பிடிக்க முடிகிறது.

**அ. ஸ்ரீநிவாஸன், திருநெல்வேலி.**

**கொ**தித்தலுக்கும், ஆவியாதலுக்கும் என்ன வித்தியாசம்?

**நீ**ர் கொதிக்கும்போதும் ஆவியாகும் போதும் அது நீர் வடிவத்தைவிட்டு ஆவி வடிவமாக மாறுகிறது. கொதித்தலின்போது அந்தச் செயல் விரைவாக நிகழ்கிறது. ஆவியாதலின்போது மெதுவாக நிகழ்கிறது.

எல்லா வெப்ப நிலைகளிலும் ஆவியாதல் என்னும் செயல் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் கொதித்தல் என்னும் செயல், கொதி நிலை (Boiling point) என்று சொல்லப்படும் ஒரு குறிப்பிட்டதாயும் தக்க அளவு உயர்ந்ததாயும் உள்ள வெப்ப நிலையில் தான் நிகழ்கிறது. பொருளுக்குப் பொருள் இந்தக் கொதி நிலை வெவ்வேறாகவும் அதற்கே உரியதாகவும் இருக்கும்.

ஆவியாதலின் போது திரவத்தின் மேல் பரப்பிலிருந்து மட்டும் தான் ஆவி வெளிப்படும். ஆனால், கொதித்தலின் போது திரவத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆவி வெளிப்படும்.

**கே.ஏ. சாமி, திருச்சி.**

**எ**லெக்ட்ரிக் பல்பு எரிகிறதே. அதை எப்படிச் செய்கிறார்கள்? அது எந்தப் பொருள்களினால் செய்யப்படுகிறது?

**மி**க மெல்லிய கம்பியின் வழியாக ஒரு மின்சார ஓட்டம் ஓடினால், அந்தக் கம்பியில் மிகவும் சூடு ஏறுகிறது; கம்பி தக தக என்று ஜொலிக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு அந்த மெல்லிய இழை போன்ற கம்பியில் சூடு அதிகமாக ஏறுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அது பிரகாசமாக ஜொலிக்கிறது.

ஆனால், திறந்த இடத்தில் ஒரு கம்பி சூடு பெற்று, ஜொலித்து எரியுமானால், அது காற்றிலுள்ள ஆக்ஸிஜனோடு இணைந்து ஆக்ஸைடு என்னும் கூட்டுப் பொருளாக ஆகிறது. இந்த ஆக்ஸைடு எளிதில் தூள் தூளாக ஆகும் தன்மை உள்ளது.

இப்படி நிகழுமானால், கம்பி அழிந்து போகும். ஆகையால் இப்படிக் கம்பி அழிந்து போகாமல் தடுப்பதற்கு இரண்டு வழிகளைக் கையாளுகிறார்கள். முதலாவதாக, மின்சார விளக்குக் குமிழை மூடுவதற்கு முன்னால், அதற்குள்ளிருந்து காற்று முழுவதையும் நீக்கி விடுகிறார்கள். அப்படிச் செய்வதால், கம்பியோடு இணைவதற்கு ஆக்ஸிஜன் இருப்பதில்லை; ஆகவே கம்பி கெடுவதில்லை. இரண்டாவதாக காற்றை நீக்கிய பின் குமிழுக்குள் நைட்ரஜன் போன்ற வாயுவை நிரப்புகிறார்கள். இந்த வாயு கம்பியோடு இரண்டாவது வகையில் செய்யப்பட்ட விளக்கு முதல் வகையைவிட அதிகப் பிரகாசமுள்ளதாக இருக்கும்.

விளக்குக் குமிழைச் செய்வதற்குத் தெளிவான கண்ணாடியை உபயோகிக்கிறார்கள். குமிழுக்குள்ளே வைத்திருக்கும் கம்பி இழை, இக்காலத்திலே பெரும்பான்மையும், டங்ஸ்டன் (Tungsten) என்னும் உலோகத்தால் செய்தது. டங்ஸ்டன் என்னும் உலோகம் மிக அதிகமான வெப்பத்தை, உருகிப் போகாமல், தாங்க வல்லது. அந்தக் கம்பி-இழையின் இரண்டு கோடிகளும் குமிழின் அடிப்புறத்திலே ஒன்றோடொன்று படாமல், தனித்தனியே வெவ்வேறு உலோக முனைகளோடு பொருத்தப்பட்டிருக்கின்றன. சில பல்புகளில் தெளிவான கண்ணாடிக்குப் பதிலாகப் பால் நிறமான, அல்லது முத்து நிறமான கண்ணாடியை உபயோகிப்பதும் உண்டு.



# பாலர் கவி அரங்கம்

## ஆழ்கடலே!

1. அலைதாவும் ஆழ்கடலே! - உன்
ஆழமதை யாரறிவார்,
கிளைமேவும் புள்ளினம்போல் - உனைக்
கீழ்வானம் தொடுவது ஏன்?

2. குழவிதனை முத்தமிடும் - அந்தக்
குணமேவும் தாயைப்போல்,
கரையதனை முத்தமிடும் - உன்
காதலையோ நானறியேன்!

3. மிதந்தோடும் பெருங்கலங்கள் - உன்
மேனிதனை வாட்டலையோ?
ஆடிவரும் பெருங்காற்று - உன்
அலைமீது மோதுவதேன்?

4. இரவெல்லாம் பகலெல்லாம் - நீ
இரைச்சலிட்டுத் தூங்கவில்லை!
ஓயாது புரளுவதால் - உனக்கு
ஓய்வென ஒன்றிலையோ?

—டி. கே. எம். ஸ்ரீதர், நாகை.

## அருணன் உதித்தான்

பிரிந்தது இருட்டு வேளை
விரிந்தது அரும்பு முல்லை
நிறைந்தது செம்பொற் சோதி
பரந்தகீழ் வான முற்றும்.

அருணனும் உதித்தான் - நீண்ட
கருமுகில் மறைந்து போக
எருதுடன் உழவர் கூடித்
தெருவழி கழனி சென்றார்.

உத்தித்தது பரிதி கீழே
சிரித்தது செவ்வான் - இதழ்
விரித்தன கமலப் பூக்கள்
சிலிர்த்தது வைய மெல்லாம்.

—ந. மெய்ப்பொருள், அம்மாப்பேட்டை.

என். ராமகிருஷ்ணு

# போட்டோ



1. இது என்ன பூ?
   தாமரை
   அல்லி
   நீலோத்பலம்



2. எந்த ஊர் மஹல்?
   மைசூர் லலிதா மஹல்
   மதுரை திருமலைநாயக்கன் மஹல்
   ஜய்ப்பூர் ஹவா மஹல்



3. இது என்ன?
   முடைசல்
   ஓலைப் பெட்டி
   பொட்டுக்கூடை



4. சென்னையில் எந்த வாராவதி?
   ஹாமில்டன்
   ஸ்டான்லி
   நேபியர்

5. இது எந்தக் காலத்தைக் குறிக்கிறது?
இலையுதிர் காலம்
கோடை காலம்
பனிக் காலம்





6. எந்த ஊர்க் கோபுரம்?
திருபுவனம்
கங்கைகொண்ட சோழபுரம்
தஞ்சை



7. எந்த மரத்து வண்டுகள்?
ஆரஞ்சு
மா
தென்னை



8. இந்த ஓட்டின் பெயர் என்ன?
ரெயிலோடு
நாட்டோடு
தட்டோடு.

(விடை 40-ஆம் பக்கம்)

# சந்திரகிரிக் கோட்டை

'ஜனா'

விமலனுக்கு அந்த இடத்தை விட்டுப் போனால் போதும் என்று ஆகிவிட்டது. அந்தக் கோட்டையைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அங்கே அவன் பெற்றதாகச் சொன்ன வெற்றி அவனைக் கேலி செய்தது. எந்த வீரனும் இந்த மாதிரி ஒரு கேவலமான போட்டியில் கலந்து கொள்ள மாட்டான் என்று நிச்சயமாகத் தோன்றிற்று. அதனால் தானோ என்னவோ அமலன் மிகவும் கௌரவமாக வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்து விட்டான்! 'அதைப் பார்த்தாவது எனக்குப் புத்தி வந்திருக்கப் படாதா? அதிருஷ்டம் என்னவோ என் பங்கில் இல்லை. அறிவுகூடவா என்னைக் கைவிட்டு விட்டது!' என்று மனம் அவமானத்தினால் குன்றியது.



நீலவேணி காற்றினும் கடிய வேகத்தில் பாய்ந்து சென்றது. போகும் வழியெல்லாம் பெரும்பாலும் காட்டுப் பாதையாகவே இருந்தது. அங்கங்கே கிளைப் பாதைகள் வேறு பிரிந்து சென்றன. ஆனால் பாதைகள் பிரியும் இடங்களில் எல்லாம் கைகாட்டி மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதிலிருந்து சந்திரகிரிக்குச் செல்லும் பாதையைப் பார்த்துக்கொண்டே விமலன் நீலவேணியைச் செலுத்தினான்.

அவன் மனத்திலே ஒருவிதமான திட்டமும் இல்லை. இந்துமதியைப் பற்றிக் குந்தவி சொன்னது உண்மையாக இருந்தால் அவனால் தான் என்ன செய்ய முடியும்? எங்கே என்று அவனைத் தேடிக் கண்டு பிடிப்பது?

விமலன் தீர்மானமான ஒரு முடி

வுக்கு மட்டும் வந்துவிட்டான். என்ன நேர்ந்தாலும் சரிதான்; இந்துமதி இன்னொருவன் கையைப் பிடிக்கும்படி விடுவதில்லை. அது அமலனாக இருந்தாலும் சரி; பெரிய கொம்பனாக இருந்தாலும் சரி. அவனுடைய கடைசி மூச்சு இருக்கும்வரை அது நடவாத காரியம். இந்தமாதிரி ஒரு முடிவுசெய்து கொண்ட பிறகு அவனுக்கு அந்தக் காட்டுப் பாதையெல்லாம் வளர்ந்து போவதுபோலவே தோன்றிற்று. உச்சி வெயில் ஏறிக்கொண்டேயிருந்தது. அவன் போக வேண்டிய தூரமோ பல காத தூரம் இருக்கும்போல் இருந்தது. சந்திரகிரி நகரம் உத்தேசமாக இன்ன திசையில் இருக்கும் என்பதை அவனால் உணர முடிந்தது. ஆனால் பல இடங்களில் பாதை வேறு திசையாகச் சுற்றிக்கொண்டு போவதைப் பார்த்ததும் 'நிச்சயம் சந்திரகிரி போன்ற நகரத்துக்கு வேறு ஏதாவது குறுக்கு வழியில்லாமல் போகாது' என்று தோன்றியது. அடர்ந்த காட்டுப் பிரதேசமாக இருந்தாலும் அந்த வழி பீடபூமியிலும் பள்ளத்தாக்கிலும் ஏறி இறங்கிச் சென்றது. சில இடங்கள் பொட்டலாகவும் இருந்தது. பல இடங்களில் பாதை வளைந்து வளைந்து சென்றது. சிறு சிறு குன்றுகளும் சிறு சிறு ஏரிகளும் வழியிலே குறுக்கிட்டன.

வெகுநேரம் பிரயாணம் செய்த களைப்பினால் இயற்கை அழகு நிரம்பிய இடம் ஒன்றைக் கண்டதும் அவன் நீலவேணியை நிறுத்தினான். அந்த இடத்திலே மரங்களில் பழங்கள் பழுத்துக் குலுங்கின. செடிகொடிகளிலே மலர் பூத்துச்



சொரிந்திருந்தன. மான்களும் மயில்களும் குறுக்கும் நெடுக்கு மாகக் கண்களிலே தென்பட்டன. குயில் கூ கூ என்று அவனை இனிய குரலால் வரவேற்பது போல் கூவியது. வெயிலே தெரியாதபடி குளிர்ச்சியாக இருந்த அந்தப் பிரதேசத்துக் குள்ளே போகப் போக அது நீண்டு போய்க்கொண்டே யிருந்தது. வந்த பாதையைவிட்டு அவன் வெகு தூரம் வந்துவிட்டான். அல்லியும் ஆம்பலும் படர்ந் திருந்த தடாகம் ஒன்றைக் கண்டு அவன் தாகவிடாய் தீர்த் துக் கொள்ள விரும்பினான்.

குதிரையும் களைத்திருந்தது. முழங்கால் உயரத்துக்குமேல் வளர்ந்திருந்த பசும்புல்லையும் தண்ணீரையும் கண்டதும் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு தான் போவோமே என்று விமலன் எண்ணினான். குதிரையின் சேணத் தைக் கழற்றி அதைத் தன் போக்கில் சிறிது மேயவிட்டுவிட்டு அவன் கனிகளையும் இனிக்கும் கிழங்குகளையும் சேகரித்துவந்தான். நாடாவது, நகரமாவது! இந்த மாதிரி இடத்தில் அலுப்புச் சலிப் பில்லாமல் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இருக்கலாமே என்று அவனுக்குத் தோன்றியது.

ஒரு நாழிகை நேரம் சென்ற பின் அவன் மீண்டும் புறப் பட்டான். மனசு லேசாக இருந் தது. உடம்பிலே புதுத் தெம்பு பிறந்திருந்தது. எந்த வழியாக வந்தானோ அந்த வழி சரியாகத் தெரியவில்லை. கடைசியில் குறுக் கிட்டுச் சென்ற ஒரு பாதையில் குதிரை தானாகச் சென்றது. கிட்டத்தட்ட அந்தத் திசையில் தான் சந்திரகிரி இருக்கவேண்டும் என்று அவன் குதிரையைச் செலுத்தத் தொடங்கினான். இரண்டு காத தூரத்தில் சந்திர கிரிக் குன்று மேகம் போலச் சாம் பல் வர்ணமாக நிற்பது புலப் பட்டது. எப்படியும் சூரியாஸ்த மனத்துக்குள் அந்த இடத்துக்குப் போகவேண்டும் என்று அவன் நிச்சயித்துக் கொண்டான்.

பாதை ஒரு பெரிய மணல் மேட்டின்மேல் சென்றது. மற்ற இரண்டு பக்கமும் காடு. இதுவரை யில் நிர்மானுஷ்யமாக இருந்த அந்தப் பிரதேசத்தில் இப்போது ஏதோ இரைச்சலின் எதிரொலி கேட்டது. விமலன் சுற்றுமுற்றும் பார்த்தான். அடர்ந்த மரங்களுக் கும் மேலாக ஒரு புழுதிப்படலம் தெரிந்தது. குதிரைகளின் ஓட்டத்தால் எழும்பும் புழுதிப் படலமாகத்தான் இருக்கவேண் டும். அப்படியானால் குதிரைகளில் கூட்டமாக வருபவர்கள் யார்? அவர்கள் சந்திரகிரியைச் சேர்ந்த வர்களாக இருக்க முடியாது. ஏனென்றால் புழுதிப்படலம் அவனுக்குப் பின்புறமாகத்தான் தெரிந்தது. அவன் வந்த வழியாக இல்லாவிட்டாலும் அந்தப் பாதை யில் வந்து சேரும் கிளைப்பாதை ஒன்றின் வழியேதான் அந்தக் குதிரைகள் வந்துகொண்டிருந்தன.

நீலவேணி, 'ஙஙஙங' என்று முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு பெரிதாகக் கனைத்தது. விமலன் உடனே திரும்பிப் பாதை யைப் பார்த்தான். எதிரே ஒன்றையும் காணவில்லை. ஒரு முயல்குட்டிதான் தத்தித் தத்தி ஒரு புதருக்குள் ஓடி மறைந்தது. அவன் நீலவேணியின் முதுகில் தட்டிக் கொடுத்து, "முயல் பிடிக்கும் நேரம் இதுவல்லடா! நீ போ!" என்று செல்லமாகக் கூறினான்.

குதிரைகளின் குளம்பொலி இப் போது நன்றாக் கேட்கத் தொடங் கியது. விமலன் திரும்பினான். ஈட்டி கேடயங்கள் அணிந்த வீரர் கள் சிலர் குதிரையின் மீது ஏறி வந்துகொண் டிருந்தார்கள். எல்லாருக்கும் முன்னால் வருபவன் ஓர் இளைஞன் போல இருந்தது.

விமலனுக்கு யோசனையாகப் போய்விட்டது. அவர்களுக்கு முன் னால் போவதென்றால், அது ஒன்றும் பெரிய காரியமல்ல. நீலவேணி யின் ஓட்டத்துக்கு முன் பஞ்ச கல்யாணியைத் தவிர வேறு எதுவும் நிற்காது. அது நிச்சயம்.

ஆனால் அவன் அப்படிப் போக விரும்பவில்லை. வருபவர்கள் யார், எங்கே போகிறார்கள் என்பதை யெல்லாம் தெரிந்து கொள்ள அவனுக்கு ஆவலாக இருந்தது. அவர்கள் ஒருகால் கொள்ளைக் கூட்டத்தினராகவும் இருக்கலாம். இருந்தால்தான் அவனுக்கு என்ன? மடியில் கனமிருந்தால் அல்லவா வழியில் பயம்? விமலன் தயங்கித் தயங்கி முன்னேறிக் கொண்டிருந்தான். பின்னால் வருபவர்களைப் பொருட்படுத்தாதவன் போல அவன் மெல்லப் போய்க் கொண்டிருந்தான். இடையில் இருந்த உடைவாளை ஒரு முறை தொட்டுப் பார்த்துக்கொண்டான். அதற்கு வேலை யென்பதே இல்லாமல் அல்லவா இத்தனை நாளும் போய்விட்டது!

இவன் திரும்பிப் பார்த்து விட்டுப் பிறகு கவனிக்காதவன் போல் செல்வதைக் கண்ட குதிரை வீரன் ஒருவன் வாயருகே கையை வைத்துக் கொண்டு, ''நீ யாரானாலும் சரி; மேலே போகாமல் அங்கேயே நில்!'' என்று கத்தினான். அவன் சொன்னது 'ஹோ' என்று எதிரொலித்ததே தவிர வார்த்தைகள் தெளிவாக விளங்கவில்லை. விமலன் இப்போது நன்றாகத் திரும்பிப் பார்த்தான். குதிரைகள் சமீபத்தில் வந்துகொண்டிருந்தன.

''சொல்வது காதில் விழவில்லை!'' என்று முன்னால் வந்தவர்களில் ஒருவன் மீண்டும் சத்தம் போட்டுக் கூவினான். அப்படிக் கூவிவிட்டு அவன் மட்டும் சற்று வேகமாக முன்னால் வந்தான்.

அப்படி வந்தவனுக்கு முப்பது வயசுக்குமேல் இருக்கும். மிகுந்த பலசாலி என்பதற்கு அடையாள மாக முகத்திலெல்லாம் தசைகள் கண்டு கண்டாக ஏறியிருந்தன. பார்த்தால் படைத் தலைவன்போல் அவன் மார்புக் கவசம் அணிந்திருந்தான். அவன் விமலனுக்கு அருகே வந்ததும், ''யார் ஐயா நீர்?'' என்றான்.

விமலனுக்கு அவன் கேட்ட முறை வெறுப்பாக இருந்தது. அதனால் அவன், ''நீ யார்? அதைச் சொல் முதலில்'' என்றான்.

''அது உமக்குத் தெரிய வேண்டுமானால் நீரே சற்றைக் கெல்லாம் தெரிந்துகொள்ளலாம். ஆனால் எதற்கும் மரியாதை காட்டிப் பேசுவதே நல்லது. ஏதோ ஒரு தேசத்துக்கு ராஜ குமாரனாக இருந்தால்கூட மற்றவர்களை மதியாமல் அழைப்பது தவறு'' என்றான் அந்த வீரன்.

விமலனுக்குச் சுருக்கென்றது. இடை வாளில் வலது கையை ஊன்றிக்கொண்டே, ''அது எனக்குத் தெரியும். நான் யார் என்று பதில் சொல்ல வேண்டியது கட்டாயமோ?'' என்றான்.

''இல்லை; அதை நாங்களே தெரிந்துகொள்ள முடியும்?''

வீரனுடைய முகத்தில் அசாதாரணமான கர்வம் ஒளிர்ந்தது.

''ஓஹ்ஹோ! அப்படியானால் ஏன் கேட்கிறாய்?'' என்றான் விமலன்.

வீரனுடைய வாள் மாலை வெயிலில் மின்னலெனப் பளிச்சிட்டது. அடுத்த கணம் லகானைப் பிடித்திருந்த இடது கைக்கும் லகானுக்கும் சம்பந்தமில்லாமல் போய் விட்டது. துண்டித்துப்போன லகான் இரு புறத்திலும் போய் விழுந்தது.

நல்ல பாம்பு சீறுவதுபோல விமலன் உடை வாளை உருவியபடி ஒரு சிறு சிறினான். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் அந்த வீரனுடைய வாள் தரையில் இரு துண்டாக ஒடிந்து விழுந்தது.

பின்னால் வந்தவர்கள் இதற்குள் அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். முன்னால் வந்த இளைஞன் சிரித்துக்கொண்டே சிறிதும் தாமதிக்காமல் தன் இடையில் இருந்த வாளை எடுத்து அந்த வீரனிடம் தூக்கிப் போட்டான். ஒடிந்த பிடியைக் கீழே விட்டு விட்டு, அவன் அந்த வாளை வெகு லாகவமாகப் பிடித்துக்கொண்டான். இவ்வளவும் ஒரு நொடிக்குள்ளேயே நடந்துவிட்டது.

(தொடரும்)



# எங்கள் பகுதி

**1-2-54** இதழ் அட்டை படத்தைப் பார்த்து மிக மகிழ்ச்சி அடைந்தேன். ஒரு சிறு பையனின் விஷமத்தனமும் குறும்புத்தனமும் அப்படியே முகத்தில் பிரதிபலிக்கின்றன.

மதிப்பிற்குரிய நேருஜி அவர்கள் குழந்தைகள் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு அருமை. நமது இந்தியாவை ஓர் ஒப்புயர்வற்ற நாடாக்க அவர் கூறியபடி நாம் கட்டாயம் நடக்கவேண்டும்,

லீடர் மணி, வீட்டை விட்டு வெளியேறிய ஒரு மாணவனின் உள்ளத்தைக் கண்ணாடி போல் தெளியக் காட்டுகிறது. மிகவும் சுவாரஸ்யமான கட்டம்.

சந்திரகிரிக்கோட்டை கன ஜோராக இருக்கிறது. இக்காலத்திற்கேற்ப, புதுமை மெருகுடன் விறுவிறுப்பான இனிய தமிழ் நடையில் எழுதியுள்ளார் ஜஹ.

ரோஜா மலரைப் போல, பாரஸீக ரோஜாவானது கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பூட்டுகிறது.

மிகச் சிறந்த கதை 'குருடனின் கதை' என்பது என் அபிப்பராயம். உணர்ச்சி நிறைந்த கதை.

'மகள் கிடைத்தாள்' என்ற கதை சுமாராக இருக்கிறது. 'தண்டனே' என்ற கதை நான் நினேத்தபடியே முடிந்திருக்கிறது. இதுவும் நன்ருக இருக்கிறது. 'ஷாவின் தாடி' ஏற்கனவே ஒரு பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது.

நீதி அடங்கிய கதை 'பொருமைக்கார நரி'. இக்கதையைப் படிக்கும்பொழுதே ஆவலேத் தூண்டிவிடுகிறது.

'வான வில்' சுவையுடன் நன்ருக இருக்கிறது.

வயலுக்கு எருவைப் போல, கேளுங்கள் சொல்கிறேன், போட்டோ க்விஸ், செய்திகள் முதலிய பகுதிகள் இன்றைய மாணவ மாணவிகளுக்கு அறிவை விருத்தி செய்யும் விதமாக அமைந்துள்ளன.

புதிர்க் கேள்விகள் ஜோராக இருக்கின்றன. கவிதை உணர்ச்சியை வளர்க்கவேண்டும்என்ற எண்ணத்துடன் அமைக்கப்பட்ட பாலர் கவி அரங்கம் இந்த இதழில் நல்ல கருத்துக்கள் அமையப் பெற்றுச் சிறப்பாக விளங்குகிறது. எப்பொழுதும் போலவே அருமையான சம்பவம் அருமையாக இருக்கிறது.

மொத்தத்தில் என் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்:

சுடர் விளக்காயினும் தூண்டு கோல் இன்றியமையாதல்லவா? இன்றைச் செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு கண்ணன் ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லே.

—த. ஜயந்தி, குளித்தலே.

---

## போட்டோ க்விஸ் விடை:

1. அல்லி.
2. மதுரை திருமலே நாயக்கன் மஹல்.
3. முடைசல்.
4. நேபியர் வாராவதி.
5. இலேயுதிர் காலம்.
6. தஞ்சை பெரிய கோயில்.
7. தென்னே.
8. நாட்டோடு.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4

# கண்ணன் கிளைக் கழகம்

| | |
|---|---|
| கோனுப்பட்டு | உப தலைவர்கள்: K. S. ராமையா<br>M. நாகூர்.<br>செயலாளர்கள்: C. T. சுப்பையா<br>M. R. நாராயணன்<br>பொக்கிஷதார்கள்: K. N. ராமையா,<br>M. R. ராமையா, |

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. நூல் நிலையமும் விளையாட்டுக் கிளப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**காரைக்கால்** கிளைக் கழகத்தின் முதலாவது ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**பணகுடியில்** கிளைக் கழகத்தின் புது ஆண்டுத் தேர்தல் நடைபெற்றது. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகத்தின் சார்பில் சிறுகதைப் போட்டி நடைபெற்றது. பல ஊர் மாணவர்கள் கலந்து கொண்டனர். முதற் பரிசு ஈரோட்டைச் சேர்த்த ஆஸ்மீயா என்ற மாணவனுக்கு அளிக்கப்பட்டது. கழகத்தின் உப தலைவர் தெ. குமாரசாமி சொந்தச் செலவில் பரிசு அளிக்க முன்வந்தது பாராட்டுக்குரியது.

## பேனு நண்பர்கள்

1. V. S. ரகுநாதன், "தேவி வாசா" பிரம்படி, கொக்குவில், இலங்கை.

2. K. [illegible]ரணசற்குணநாதன், 'நாதன் வாசா' வயாவிளான் சந்தை. [illegible]யாவிளான், யாழ்ப்பாணம்.

3. M. ஜம்புகேசுவரன், ஐந்தாம் படிவம், A; ராஜா ஹைஸ்கூல், [illegible]

4. K.S. பெருமாள், நான்காம் படிவம், காந்தி கல்வி நிலையம், [illegible]ார் போஸ்டு, ஈரோடு வழி.

5. K. B. மணி, C/o N. கிருஷ்ணமூர்த்தி ஐயர். D. T. S., [illegible]ல்வே காலனி, மதுரை.

6. K. நடராஜன் 478/B. சோமவார்பேட், புனு 2.

7. T. B.சீதாராமன், 28. தம்புச் செட்டித் தெரு, சென்னை-1

8. V. N.வேதமூர்த்தி, 25/1, லால்சிங் குமுதனத் தெரு குயப்[illegible]டை, வேலூர். (வ. ஆ)

9. S. லூர்துசாமி, 16. பாஷ்யம் ரெட்டி 2-ஆவது தெரு [illegible]ரி, சென்னை-12.

10. T. சிதம்பரம், 96. பேட்டை நாணயக்காரத் தெரு, [illegible]காணம்.

Reg. No. M.

"அம்மா! அம்மா!.. நான் வந்திருக்கேம்மா .. நான்தான் அம்மா உன் பிள்ளை ராஜூ. ஏம்மா, என்னுடன் பேசமாட்டேங்கறே? நீ என்னைப் பார்த்தால்தான் எழுந்திருப்பேன்."



யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸ்

# வள்ளியின் செல்வன்

ஜெமினி ரிலீஸ்

இப்பொழுது

சென்னை **வெலிங்டன், பிரபாத், சரஸ்**

மூன்று தியேட்டர்களிலும் மற்றும் தமிழ்நாடெ

சென்னையில் தினசரி 3 காட்சிகள், 230, 6,